76வது சுதந்திர தின
வாழ்த்துக்கள்




www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 17 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

04th February 2024 - SUNDAY


# விமரிசையாக கொண்டாடப்பட்ட 76வது தேசிய சுதந்திர தினம்





ஜனாதிபதி தலைமையில் நிகழ்வுகள்!

அரசியல் கட்சிகள், தலைவர்கள் புறக்கணிப்பு

துக்க தினமாகவும் அனுஷ்டிப்பு

02ம் பக்கம் பார்க்க...

## ஜாமிஉல் அழ்பர் பள்ளியில் தேசிய சுதந்திர தின நிகழ்வு

**பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர்**



(ஏ.எஸ்.எம். ஜாவித்)

இலங்கையின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வுகள் கொழும்பு 11 இரண்டாம் குறுக்கு தெரு அல் ஜாமியுல் அழ்பர் (ரெட் மொஸ்க்) ஜும்ஆ பள்ளி வாசலில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸலின் வழிநடத்தலில்

02ம் பக்கம்பார்க்க...

## பாபக்கர் பள்ளி சொத்துக்களை எவருக்கும் விற்க முடியாது

- ஸ்தாபகருடைய விருப்பிலேயே பணிப்பாளர் சபை நியமனம்
- சவாலுக்கு உட்படுத்தவோ உரிமை கோரவோ எவருக்கும் முடியாது
- திணைக்கள பணிப்பாளர் பைசல் திட்டவட்டம்

தெஹிவளை பாபகர் பள்ளிவாசலின் சொத்துக்களை எவரும் விற்க முடியாது. அவ்வாறு விற்பதாக இருந்தால் அதன் பெறுமதிக்கு

06ம் பக்கம்பார்க்க...

## ஈரானில் இருந்து இலங்கைக்கு 30 தொன் பேரீச்சம் பழம்

புனித ரமழானை முன்னிட்டு ஈரானிய இஸ்லாமிய குடியரசு

06ம் பக்கம்பார்க்க...

## நிசாந்தவின் மனைவியை எம்.பி.யாக்க நடவடிக்கை



வீதி விபத்தில் கொள்ளப்பட்ட முன்னாள் பிரதி

06ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## விமரிசையாக...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் 76வது சுதந்திர தினம் இன்று நாடெங்கும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதே வேளை முக்கிய அரசியல் பிரமுகர்களும் கட்சிகளும் காலிமுகத்திடலில் நடைபெற்ற தேசிய சுதந்திர நிகழ்வுகளை புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன உட்பட எதிர்க் கட்சி பிரமுகர்களும் நிகழ்வுகளில் பங்கேற்காமையும் குறிப்பிடத்தக்கது.

76 ஆவது தேசிய சுதந்திர தின விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் "புதிய தேசம் அமைப்போம்" எனும் தொனிப்பொருளில் இன்று (04) காலை கொழும்பு காலி முகத்திடலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு உலகில் உள்ள அனைவரின் ஆதரவோடும் மீண்டும் கட்டியெழுப்பப்படும் இலங்கையின் அடையாளத்தை உலகிற்கு எடுத்துரைப்பதே இதன் நோக்கமாகும்.





ஜனாதிபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் இலங்கை இராணுவத்தினர் இசைவாத்தியங்களை இசைத்த பின்னர், பாதுகாப்பு படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோரால் ஜனாதிபதி, விழா நடைபெறும் மைதானத்தின் கொடிக் கம்பம் அருகே அழைத்து வரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மகுல் இசை மற்றும் சக் ஓசைக்கு மத்தியில் ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து 105 பாடசாலை மாணவிகள் தேசிய கீதத்தை பாடினர். அதனை தொடர்ந்து பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் மற்றும் காத்தா இசைத்தனர்.

தாய்நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதைச் செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வைக்கப்பட்டதோடு இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் 76 ஆவது சுதந்திர தின விழா அணிவகுப்பு பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசிய கெடட் படையினால் சிறப்பாக முன்வைக்கப்பட்டது.

அணிவகுப்பு ஊர்வலம் நிறைவடையும் வரை வீசேட பீடத்தில் நின்றிருந்த ஜனாதிபதி, அங்கு பயணித்த அனைத்து படைவீரர்களுக்கும் மரியாதை செலுத்தியமை விசேட அம்சமாகும்.

அத்துடன் இலங்கையின் வான் பலத்தை வெளிப்படுத்தும் வகையில், கபீர் விமானங்கள் உள்ளிட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களின் சாகசங்கள் நிகழ்வை அலங்கரித்தது. பரசூட் நிகழ்ச்சிகளும் விழாவுக்கு வர்ணம் சேர்த்தன.

இதற்கிடையில்,76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ், பிரித்தானிய மூன்றாவது சார்ள்ஸ் மன்னர், ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தென் கொரியா ஜனாதிபதி யுன் சுக் சுக் யெஓல், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, லிபிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் ஒய் அல் மென்பி, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம், அவுஸ்திரேலிய ஆளுநர் ஜெனரல் டேவிட் ஹர்லி ஆகியொரும் பாகிஸ்தான் ஜனாதிபதி, பங்களாதேஷ் ஜனாதிபதி, குவைத் அமீர் உள்ளிட்ட அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் அரசாங்கத்திற்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.









## ஜாமிஉல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இன்று (04) காலை 6.00 மணிக்கு இடம் பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி ஸப்ரி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சின் அதிகாரிகள் பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹாரிஸ் அன்வர் உள்ளிட்ட நிருவாகிகள் உலமாக்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்

இதன் போது தேசியக் கொடியை அமைச்சர் அலி ஸப்ரி ஏற்றி வைத்தார் அதனைத் தொடர்ந்து கொழும்பு ஸாகிராக் கல்லூரி மாணவர்களினால் தேசிய கீதம் இசைக் கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்க ளுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் பள்ளி வாசலின் இமாமினால் கிராஅத் ஓதப்பட்டதுடன் வரவேற்புரையை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இஸ்டம்.ஏ.எம் பைஸல் வழங்கினார். அதனைத் தொடர்ந்து விசேட துஆ பிரார்த்தனையை அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் செயலாளர் அஷ் ஷெய்க் அர்கம் நூராமித் வழங்கினார் அதனைத் தொடர்ந்து. விசேட உரையை அமைச்சர் அலி ஸப்ரி நிகழ்த்தினார் நன்றி உரையை பள்ளிவாசலின் பொருளாளர் வழங்கினார்.








SAFEWAY
TRAVELS & TOURS
Organizing Hajj, Umrah Pilgrimage & Airline Ticketing
Leaving 28th May
Returning 22nd June
Staying at Clock Towers Hotel
Staying 5 days in Madina
191/20-1, Siebel Garden,
High Level Road, Kirulapana,
Colombo – 05, Sri Lanka.
E-mail: Safewayfarook1@gmail.com
Web: www.sfewaytravelssandtours.com
hotline : +94 11 2513227
: +94 11 2513226
: +94 11 2513373
Insta: Umarahwithsafeway
FB: Safeway Travels & Tours
Res: 191/20, Highlevel Road, Kirulappana, Colombo 06.


INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
Counseling & Psychology
Teacher Training
Business Management
Spoken English
AMI Montessori
Child Psychology
IT Programs
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907
Awarded By:
INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
HND (UK) in Business Management
HND (UK) in Computing
HND (UK) in Teacher Training
HND (UK) in Psychology
HND (UK) in English
CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
Bachelors in Psychology
Bachelor of Education
BBA / MBA
BA in English
BSC IT
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032


AMAZON COLLEGE
Where Success Begins
AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk


Sapumal
Since 1977
Black Ires
PREMIUM INCENSE STICKS
VIVID
PREMIUM INCENSE STICKS
Arizona
SAPUMAL
SAFETY WAX MATCHES
SAPUMAL INDUSTRIES (PVT) LTD.
P.O. Box - 20, Mawanella, Sri Lanka. +94 35 2246642 / 2246501 Hotline: +94717 333 444
www.sapumal.com info@sapumal.com /sapumalsrilanka
ISO 9001:2015 | ISO 14001:2015 CERTIFIED COMPANY
Incense Sticks | Incense Powder | Wax Matches | Candles | Air Fresheners | Roll-On Perfumes


THE GLOBAL TRAVELS & LEISURE (PVT) LTD
THE GLOBAL TRAVELS & LEISURE
IATA Accredited Agent
Guided by
As Sheikh Shuhaib Dheeni
HAJJ 2024 PACKAGES
GOLD
Return Air Ticket.
Hajj Visa
Makkah Clock Tower 5 Starr Hotel (0 M)
Madeena 4 Star Hotel (50 M)
Delicious Food 3 Time Breakfast, Lunch, Dinner.
Complete Luxury Round Trip Transport.
Mina Tent B
Local Madina and Makkah Ziyarats with Guide.
LKR 2,150,000/-
SILVER
Return Air Ticket.
Hajj Visa
Makkah Clock Tower 5 Star Hotel (0 M)
Madeena 4 star Hotel (50 M)
Delicious Food 3 Time Breakfast, Lunch, Dinner.
Complete Luxury Round Trip Transport.
Mina Tent C
Local Madina and Makkah Ziyarats with Guide.
LKR 1,850,000/-
Al Hajj Askar Aunn
0777 031 523
Al Hajj Z A Aunn
0775 542 660
0117 221720 info@theglobal.lk WWW.THEGLOBAL.LK NO 653 MARADANA COLOMBO 10 (NEXT TO SAMAPTH BANK)

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 FEBRUARY 04 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# கிழக்கு மாகாண சபையின் உயர் பதவிகளில் முஸ்லிம்கள் புறக்கணிப்பா?

கிழக்கு மாகாண சபைக்கு ஆளனியினர் தெரிவு செய்யப்படும் பொழுது இனச் சமநிலை பேணப்படுவதில்லை என திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் ஐந்து அமைச்சுகளின் செயலாளர் பதவிகளில் ஒரு முஸ்லிம் கூட இணைக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டிய இம்ரான் மஹ்ரூப் தற்கால ஜனாதிபதியின் ஆட்சியில் முஸ்லிம்கள் மீதான விரோதப் போக்கு தொடர்வதாகவும் குற்றச்சாட்டியுள்ளார்.

நாட்டில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது முதல் கிழக்கு மாகாண சபையில் பிரதான பதவிகளில் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் நியமிக்கப்படுவது ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகின்றது. ஐந்து அமைச்சுகளின் செயலாளர்களில் இருவர் தமிழர், இருவர் முஸ்லிம், ஒருவர் சிங்களவர் என நியமிக்கப்பட்டு வந்தனர். கிழக்கு மாகாண சபையின் இன சமநிலையை கருத்தில் கொண்டே இந்த நியமனங்கள் இடம்பெற்று இருந்தன. கடந்த அரசாங்கங்கள் இந்த சமநிலையை கருத்திற் கொண்டே நியமனங்களை வழங்கி இருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின் அமைச்சின் செயலாளர்கள் நியமனத்தில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு இருப்பதாக இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்த முஸ்லிம் உறுப்பினர் எவ்வித காரணமும் இன்றி அகற்றப்பட்டு அதற்கு பதிலாக முஸ்லிம் அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் பொதுச் சேவை ஆணைக்குழு, வீடமைப்பு அதிகார சபை, சுற்றாடல் அதிகார சபை, கூட்டுறவு ஆணைக்குழு ஆகியவற்றின் சிலவற்றிலும் தவிசாளர்களாக முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இப்பொழுது இந்த நிறுவனங்கள் எவற்றிலும் முஸ்லிம்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கு சமாந்திரமாக முஸ்லிம் மக்களும் கிழக்கில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ் முக்கிய பதவிகளில் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருக்காமைக்கு ஏதும் விசேட காரணிகள் இருகின்றதா? என முஸ்லிம் தரப்பினர் மத்தியில் கேள்வி எழுப்பப்படுகின்றது. இலங்கை நிர்வாக சேவையில் அனுபவம் உள்ள முஸ்லிம் மூத்த உறுப்பினர்கள் பலரும் இருக்கின்றார்கள். மாகாண மட்டத்தில் இவ்வாறான நியமனங்கள் புறக்கணிக்கப்படுவதனால் தகுதியான பலர் விரக்தியின் விளிம்பில் வாழ்ந்து வருகின்றார்கள். உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் உடன் தலையிட்டு கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு நீதி வழங்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் ஆளுனராக இருக்கின்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த செந்தில் தொண்டமான் மலையக மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதி தொடர்பாக அடிக்கடி குரல் கொடுத்து வருகிறார். இவர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதே நேரம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்த விடயத்துக்கு மௌனம் சாதிக்கக்கூடாது. குறிப்பாக அரசாங்கத்தை ஆதரிக்கின்ற கட்சிகள் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். மேலும் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற மூத்த தலைவர்களின் ஒருவரான ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஸாரப் உட்பட அரசை ஆதரிக்கின்றவர்கள் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) **"உதயம்"**
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

# அயல் நாடுகளின் தலையீடுகள் "சார்க்" சமநிலையை பாதிக்கலாம்



சுஐப் எம்.காசிம்




தெற்காசிய அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக வளரத்துடிக்கும் இந்தியாவின் எதிர்பார்ப்புக்களால், சார்க் அமைப்பின் சமநிலை, தளம்பலுக்குள் திணிக்கப்படுகிறது. மூன்றாவது முறையாகத் தொடர்ந்து ஆட்சியைத் தக்க வைக்க இந்துத்துவ சக்திகள் எடுக்கும் பிரயத்தனங்களில் அயல் நாடுகளின் அரசியலை அவதானிக்கும் நிலைமைகள் பிரதானமாகியுள்ளன. உள்நாட்டு விடயங்களில் கவர்ச்சிகரமான பிரசாரங்கள் இல்லாதுள்ளதால், சர்வதேச சாதனைகளைப் பிரச்சாரப்ப டுத்தவே பாரதீய ஜனதா தள கட்சி முயற்சிக்கிறது. ராகுல்காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் பாரதம் முழுவதும் நடத்தி வரும் பாத யாத்திரைகள்,இந்துத்துவ சக்திகளை இடித்துரைத்துள்ளது. இதனால்,ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை வெற்றி கொள்ளும் திட்டங்களில் மோடியின் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் பங்களேதேஷ் ஆட்சியாளர்கள், இந்தியாவின் இந்துத்துவ கொள்கைக்கு எதிரான வர்களாக இருப்பதை பிரதமர் மோடி விரும்பவில்லை.இலங்கையிலும் இவ்வாறான ஒரு ஆட்சியையே, ஆர்,எஸ்.எஸ் மற்றும் விஸ்வ இந்து பரிசத் போன்ற இந்து கடும்போக்கு அமைப்புகள் எதிர்பார்க்கின்றன. அயல் நாடுகளின் அரசியல் எதிரொ லிகள் இந்தியாவுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது.இவ்வாறு வரும் இடைஞ்சல்களை எதிர்கொண்டு, இந்து தேசியத்தை இந்தியாவில் வளர்க்க முடியாதென பாரதீய ஜனதா கட்சி கருதுகிறது.எண்பது வீதம் இந்துக்கள் வாழும் பாரதத்தில், ஹிந்தி மொழியை பிரதானமாகக் கொண்டுள்ள பெரும்பான்மை மாநிலங்கள் உள்ள இந்தியாவில், மதச்சார்பின்மை தேவைதானா என்ற தோரணையிலேதான், பிரதமர் மோடியின் போக்குகளும் உள்ளன.

பிரித்தானியாவின் அடையாளங்க ளிலிருந்து முற்றாக விடுபடுவதாக அறிவித்த கையோடுதான்,இந்திய மரபில் கட்டப்பட்ட புதிய பாராளுமன் றத்தை திறந்தது பி,ஜே,பி,அரசாங் கம்.இராமர் கோயில் திறப்பு விழா வை மிகக் கோலாகலமாக்கிய பிரதமர் மோடி,பாரதப்பெருமையின் பூர்வீக அடையாளமும்,இந்துக் கலா சாரத்தின் நாகரீகமும் இதுதான் என்றார். இதனால்,சந்திரயான் விண்கலத்தை நிலவில் இறக்கிய சாதனைக்கு நிகராக அயல் நாடுகள் எதையும் சாதிப்பதை பி ,ஜே,பி, விரும்பவில்லை.கார்கில் யுத்தத்தை வென்ற பி,ஜே,பி,பிரதமர் வாஜ்பா யின் மவுசிலிருந்து உறுதியான கட்சியின் அத்திவாரம்,மோடி வரைக் கும் "ஸ்ரோங்"ஆகவே உள்ளது.இந்த அத்திவாரம் ஆடாமலிருக்க அயல் நாடுகளின் அரசியலை ஆட்டுவிக்கி றது இந்துத்துவம்.சர்வதேசப் புகழ் உள்ள ஒரு பிரதமர் பாகிஸ்தானில் இருப்பது,இந்தியாவின் சர்வதேச ராஜதந்திரங்களைப் பாதிக்கலாமெ ன பி,ஜே,பி, கருதுகிறது.அந்நாட்டில் பலமிக்க பிரதமர்கள் இருந்த காலத்தி லேதான் இந்தியாவுக்கு நெருக்குவா ரங்கள் நிலவின.இதனால்,பாகிஸ்தா னுக்கு வேண்டாத அரசியலை பங்க ளாதேஷிலும்,சர்வதேசத்துடன் நட்பில்லாத ஆட்சியை பாகிஸ்தா னிலும் எதிர்பார்க்கிறது,பாரதத்தின் இன்றைய அரசாங்கம்.எதிர் வரும் ஏப்ரல் தேர்தல் வரும் வரைக்கும் இவ்விடயத்தில்,இவ்வரசு விழிப்பா கவும் இருக்கும்.

நாலாவது முறையாகத் தொடர்ச்சி யாக வெல்லுமளவுக்கு ஷேக்ஹ ஸீனாவின் அரசியல்,சாதித்தவை எவை?ஆட்சிக்கு வந்த ஒரே தடவை யில் (2018--2022) இம்ரான்கானை கவிழ்ப்பதற்கான காரணங்களைத் தேடுகையில்,இந்தியாவின் தேவை கள் இவற்றில் இருப்பதாகவே தெரிகி றது. ராவல்பிண்டி நீதிமன்றத் தீர்ப்புக் களின்,விளைவுகள் இம்மாதம் 08 இல், பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் எதிர்பார்க்கப்படுகிறது.இதற்கு முன்னரும் இப்படியொரு தீர்ப்புக்கு முகங்கொடுக்க நேர்ந்தது இம்ரானுக்கு.இவரைப் பதவி கவிழ்த்த கையோடு நடாத்தப்பட்ட மாகாணசபை தேர்தலில் இம்ரானின் கட்சியே அமோக வெற்றியீட்டியது. மக்களின் மன நிலைகளை அறிவதற்காக அவசரமாக நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகளால் ஆடிப்போன அரசாங்கம், அன்றிலிருந்தே இம்ரானை கருவறு க்கத் தொடங்கியது.இதனால், இம்ரானின் கட்சிக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டு,தேர்தலை எதிர்கொள்கிறது இக்கட்சி.அரசின் கெடுபிடிகளுக்குப் பயந்துபோன இம்ரானின் கட்சியைச் சேர்ந்த பலர், சுயேச்சையாகவும் போட்டியிடு கின்றனர். ஆப்கானிஸ்தானில், தலிபான்கள் ஆட்சி செய்வதால், ராஜதந்திரங்களை தவிர்த்து வேறென்ன வழிகளைக் கையாளலா மெனவும்,இந்துத்துவம் சிந்திக்கலாம்.இவற்றையெல்லாம் நன்கு அவதானித்து வருகிறது இந்தி ரா காங்கிரஸ் உள்ளிட்ட எதிரணிகள். இதனால், அரசியலுக்காக கடவுளை யும் ஏமாற்றும் அரசியலை பி,ஜே,பி, செய்வதாக தமிழக முதல்வர் கருத்து தெரிவித்திருக்கிறார்.இ ந்நிலையில்,இம்மாதம் 18 இல்,தமிழகம் வரவுள் ளார் பிரதமர் மோடி.திராவிடர்களின் அதிருப்தியைத் தணிப்பதற்காக, இராமர்கோவில் அனைவருக்குமான ஆலயமென முன்னாள் முதல்வர் பன்னீர்ச்செல்வம் அறிவித்துள்ளார்.

சார்க் நாடுகளின் கூட்டமைப்புக்குள் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரிப்ப தற்கான அறிகுறிகள்,பிராந்திய அரசியல் சமநிலையை பாதிக்கலாம்.



76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை ஜாமிஅத்துல் பாஸியியதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் சுதந்திர தின நிகழ்வு 4ம் திகதி கலாபீட வளவில் நடைபெற்றது.

கலாபீட நிர்வாக சபை தலைவர் சட்டத்தரணி எம்.ஸீ.எம் ஹம்ஸாவின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற நிகழ்வில் நாட்டில் சாந்தி சமாதானம் ஐக்கியத்திற்காக விசேட துவா பிரார்த்தனையும் இடம்பெற்றது.நிகழ்வின் இறுதியில் கலாபீட வளவில் மரம் நடும் நிகழ்வும் இதன் போது இடம்பெற்றது. கலாபீட இணைப் பொருளாலர் எம்.ஆர்.எம். பர்ஹான் உறுப்பினர்களான பீ.எம். முக்தார், அல்ஹாஜ் ரியாஸ் பாஸி, பழைய மாணவர் சங்க செயலாளர் மௌலவி எம் ஆர் எம் ரஜீன் (ஷாதுலி), கலாபீட விரிவுரையாளர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(பீ.எம். முக்தார்)







# உலக விவகாரங்களை அணுகுவதில் முக்கிய பாத்திரம் வகிக்கும் சவூதி

## இலங்கையுடனான உறவுகளையும் பலப்படுத்தும் வகையில் 2023இல் பல முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டன

(காலித் ரிஸ்வான்)

2023ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து அரசியல் சீரமைப்புகளை செய்து, கனிசமான உலகளாவிய உச்சிமாநாடுகள் மற்றும் அதி முக்கிய நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கி நடாத்தி வருவதிலிருந்து சவூதி அரேபியா உலக அரசியல் அரங்கில் ஒரு முக்கிய இராஜதந்திர கதாப்பாத்திரமாக உருவெடுத்துள்ளமை யாவரும் அறிந்ததே.

சர்வதேச இராஜதந்திர விவகாரங்களில் சவூதி அடைந்துள்ள இந்த குறிப்பிடத்தக்க உயர் நிலையானது சவூதியின் வளர்ந்து வரும் பூகோள அரசியல் செல்வாக்கிற்கு ஒரு சான்றாக இருப்பது மட்டுமல்லாது, அதன் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளில் புதியதொரு மறுமலர்ச்சியையும் அடையாளம் காட்டியுள்ளது.

கடந்த ஆண்டுகளில் தோன்றிய பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல், பொருளாதாரம் சார் மற்றும் இதர சிக்கல்களை சீர்செய்யும் நோக்கில் சவூதி அரேபியா அர்ப்பணிப்புடனும் வேகமாகவும் செயற்பட்டு வந்ததோடு, சர்வதேச நெருக்கடிகளை நிர்வகித்தல் மற்றும் பல்வேறு வகையான உலகளாவிய பிரச்சினைகளின் போது பல பேச்சுவார்த்தைகளை தொடங்கி நடாத்துவதிலும் அதன் ஆர்வத்தை வெளிப்படுத்தியமை அரசியலை ஆராயும் எவரும் மறுக்கமுடியாத நிதர்சன உண்மையாக இருக்கிறது.

போர் பிரதேசங்களில் சிக்குண்ட மக்களை அப்பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பாக மீட்பதில் இருந்து அம்மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலிருந்து முரண்பட்ட நாடுகளிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வழிசெய்து அவற்றுக்கு தலைமை தாங்குவது போன்ற முன்மாதிரியான விடயங்களை சவூதி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த செயற்பாடுகள் மூலம் முன்கூடிய ராஜதந்திரத் திட்டமிடல் மற்றும் அவற்றை சிறப்பாக கையாள்தல் போன்ற விவகாரங்களில் நாங்கள் திறமையானவர்கள் என்பதை அந்நாட்டு அரசியல் பாத்திரங்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

மாறிவரும் கூட்டணிகள் மற்றும் அதிகரித்து வரும் சர்வதேச அரசியல் சவால்களுடன் கூடிய சூழ்நிலையில், முக்கியமான பேச்சுவாரத்தைகளுக்கான அழைப்பாளராகவும் சர்வதேச மோதல்களைத் தீர்ப்பதில்  மத்தியஸ்தராக செயற்பட்டதும் சவூதி அரேபியாவின் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சர்வ தேசங்களுடனுமான தனது ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் அந்நாட்டின் அவாவையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இவ்வாறான குறிப்பிடத்தக்க இராஜதந்திர முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்ட சவூதி அரேபிய இராச்சியம், சர்வதேச அரசியல் நிகழ்ச்சி நிரலை வடிவமைக்கும் ஒரு மையப்புள்ளியாக உருவெடுத்திருக்கிறது.

கடந்த 2023ம் ஆண்டு முழுவதும், சவூதி அரேபிய இராச்சியம் குறிப்பிடத்தக்க சர்வதேச உச்சிமாநாடுகளை நடத்தியது. ஆகஸ்ட் மாதம், உக்ரேனிய நெருக்கடி பற்றிய கலந்துரையாடலுக்காக சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களை வரவழைத்து ஜித்தா நகரில் ஒரு உச்சி மாநாட்டை நடாத்தியது. வளைகுடா நாடுகளின் கூட்டுறவுக் கவுன்சில் (புஊஊ) மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (யுளுநுயுே) ஆகியன தங்கள் தொடக்க உச்சிமாநாட்டை அக்டோபர் மாதத்தில் சவூதியில் நடாத்தியது. காசாவின் போர் நிலைமைக்கு தீர்வுகாணும் வகையில், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை நிவர்த்தி செய்ய நவம்பர் மாதம் ரியாத் நகரில் ஒரு அரபு-இஸ்லாமிய உச்சி மாநாட்டைக் கூட்டியது. இதைத் தொடர்ந்து சவூதி-ஆபிரிக்க உச்சிமாநாடு நடைபெற்றது, மேலும் கடந்த ஆண்டு இறுதிப் பகுதயில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் சவூதிக்கான விஜயத்தைத் தொடர்ந்து ஒரு முக்கிய சவுதி-ரஷ்ய உச்சிமாநாடு நடைபெற்றது.

### சூடானில் சவூதி முன்னெடுத்த மீட்புப் பணி

சூடானில் உள்நாட்டு பிரச்சனைகளால் ஏற்பட்ட பதட்ட நிலையின் போது சவூதி அரேபிய தனது கடற்படையை பயன்படுத்தி மேற்கொண்ட மீட்புப்பணி உலகளவிலும் பாராட்டப்பட்டது. சூடானிய ராணுவம் மற்றும் சுளுக குழுவினருக்கிடையலான மோதலுக்கு மத்தியல் 184 சவூதி அரேபியர்கள் உட்பட 100 நாடுகளைச் சேர்ந்த 5,000க்கும் மேற்பட்டோர் அந்நாட்டிலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக சவூதி வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது. இதில் 32 இலங்கையர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது உலகளவில் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றாக விவரிக்கப்பட்டது.

### வளைகுடா மற்றும் மத்திய ஆசிய உச்சி மாநாடு

அரசியல் சார் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்கில், வளைகுடா நாடுகளின் கூட்டுறவுக் கவுன்சில் (புஊஊ) மற்றும் ஐந்து மத்திய ஆசிய நாடுகளின் (ஊ5) தலைவர்களை இணைத்து ஜுலை மாதம் ஜித்தா நகரில் சவூதி ஒரு உச்சிமாநாட்டை நடாத்தியது.

இவ்வுச்சிமாநாடு இரு தரப்பினரிடையே மூலோபாயங்களை வகுத்தல் மற்றும் அரசியல் சார் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் போன்றவற்றை வலியுருத்தும் வகையில் அமைந்ததோடு பாதுகாப்பு, பொருளாதார மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கூட்டாண்மைகளை வளர்ப்பது போன்றவற்றையும் வலியுறுத்தும் வகையிலும் அமைந்தது.

### ரஷ்ய உக்ரைன் மோதல் விவகாரம் குறித்த ஜித்தா சந்திப்பு

ஆகஸ்ட் மாதம், உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக ஜித்தா நகரில் ஒரு அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. சவூதி அமைச்சரவையின் உறுப்பினரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான டாக்டர் முஸ யத் அல்-ஐபான் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுமார் 30 நாடுகளைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களும் கலந்துகொண்டனர்.

வளைகுடா மற்றும் ஆசியான் உச்சிமாநாடு 16 வளைகுடா மற்றும் ஆசிய நாடுகளின் தலைவர்கள் வரலாற்றில் முதன் முறையாக ஒக்டோபர் மாதம் ரியாத் நகரில் சந்தித்தனர். 2024-2028 ஆம் ஆண்டிற்கான ஒரு கூட்டு செயல் திட்டம், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கும், இரு பிராந்தியங்களின் நலன்களுக்காகவும் தொடங்கி வைக்கப்பட்டது.

### சவூதி-ஆபிரிக்க உச்சிமாநாடு

சவூதி அரேபியா தனது சுறுசுறுப்பான வெளியுறவுக் கொள்கையை மேம்படுத்தும் விதத்தில் , நவம்பர் மாதம் ரியாத் நகரில் சவூதி-ஆபிரிக்க உச்சிமாநாட்டை நடத்தியது.

இரு நாடுகளுக்கிடையிலுமான வளரச்சியில் ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை மேம்படுத்துதல் மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்காக கொண்டு இரு கண்டங்களுக்குமிடையிலான ஒருங்கிணைப்புக்கான அடித்தளங்களை அமைப்பதில் இரு தரப்பினரின் உறுதியுடனும் அவ்வுச்சிமாநாடு நிறைவடைந்தது.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான், உச்சிமாநாட்டின் போது ஆப்பிரிக்காவில் மன்னர் சல்மான் மேம்பாட்டு முன்முயற்சித் திட்டத்தை நிறுவுவதாக அறிவித்தார், இது ஆபிரிக்க கண்டம் முழுவதும் பத்து ஆண்டுகளுக்குள் ஒரு பில்லியன் டொலர் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை  நிறுவுவதை நோக்கமாகக் கொண்டமைக்கப்பட்டது.

### அரபு-இஸ்லாமிய உச்சி மாநாடு

காஸா மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நிலைமையின் உக்கிரம் காரணமாக, நவம்பர் மாதம் ஒரு அரபு-இஸ்லாமிய உச்சிமாநாட்டிற்கு சவுதி அரேபியா அழைப்பு விடுத்தது. ரியாத் நகரில் நடைபெற்ற இவ்வுச்சிமாநாட்டில் 57 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றதோடு, காசா மீதான இஸ்ரேலிய முற்றுகையை தகர்ப்பது, போரை நிறுத்துவது மற்றும் ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டுவருவது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

### சவுதி-கரீபியன் உச்சிமாநாடு

சவுதி அரேபியா கரீபியனினருடனான (CARICOM) தனது முதல் உச்சிமாநாட்டை நவம்பர் மாதத்தில் நடாத்தியது. சவூதி விஷன் 2030 திட்டத்தோடு அமைந்த வகையில் பொருளாதாரம், முதலீடு, வர்த்தகம், எரிசக்தி, சுற்றுலா மற்றும் பிற துறைகளில் கூட்டாண்மைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இவ்வுச்சிமாநாடு நடைபெற்றது.

பரஸ்பர நலன்கள் மற்றும் நட்பு உறவுகளை முக்கித்துவப்படுத்தி, கல்வி, சுகாதாரம், கடல்சார் ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு, தளவாடங்கள், உணவுப் பாதுகாப்பு, மற்றும் சுற்றுலாப் பொருளாதாரம் உட்பட பல துறைகளில் கூட்டாண்மைகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான வழிகளை ஆராயும் முகமாக சவூதி-கரீபியன் கூட்டு அறிக்கையொன்றும் இம்மாநாட்டின் போது வெளியிடப்பட்டது.

### சவூதி-ரஷ்ய உச்சி மாநாடு

2023 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சவூதி அரேபியாவிற்கு இராஜதந்திர விஜயமொன்றை மேற்கொண்டு பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானோடு பல கட்ட சந்திப்புகளை நடாத்தினார். இருதரப்புக்குமான பரஸ்பர நலன்கள் மற்றும் இரு நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் சர்வதேசம் தொடர்பான பிரச்சனைகள் குறித்து முக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பாலஸ்தீனப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை இரு நாடுகளும் வலியுறுத்தியதோடு இரு நாடுகளின் நலன் கருதியும் எடுக்கப்படும் சர்வதேச தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே பாலஸ்தீனத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட முடியும் என்று கருத்துத் தெரிவித்தனர்.

சவூதி-ரஷ்யா பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இருதரப்பும் இணங்கியதோடு உலகளாவிய எண்ணெய் சந்தைகளை ஸ்திரப்படுத்த ழுீநுஊ க்குள் இருக்கும் நெருக்கமான ஒத்துழைப்பைப் பாராட்டினர்.

சவூதி அரேபியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவு

சவூதி அரேபியா மற்றும் இலங்கைக்கு இடையிலான வரலாற்று ரீதியான உறவுகளையும் தாண்டி, பாரம்பரியமாக புலம்பெயர் தொழிலாளர்களின் நலன் மற்றும் ஹஜ் உம்ரா விவகாரங்களின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட இத்தகைய வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம் சார் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

விஷன் 2030 என்ற இலட்சிய திட்டத்துடன் சர்வதேச அரங்கில் முன்னணிப் பாத்திரத்தை சவூதி அரேபியா வகிக்கும் நிலையில், இலங்கையும் தற்போது சவூதியுடனான பன்முக உறவுகளை மேம்படுத்தி அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் உறவுகளைப் பலப்படுத்த அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில், சவூதி அரேபியாவில் இருந்து இலங்கைக்கான முதலாவது இருதரப்பு அமைச்சர்களின் விஜயமானது சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் கௌரவ பைசல் பின் பர்ஹான் அவர்கள் இலங்கைக்கு மார்ச் 2022 இல் விஜயம் செய்ததில் இருந்து ஆரம்பமானது. கடந்த மார்ச் 2022 முதல் ஜுன் 2023 இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் இருந்து சவூதிக்கு 7 அமைச்சர்கள் விஜயம் செய்துள்ளனர்.

இதில் ஜனவரி 2023 இல் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ அலி சப்ரியின் விஜயமும் அடங்கும்.

இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ தாரக பாலசூரிய இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழு கூட்டத்தின் முதலாவது அமர்வில் பங்கேற்பதற்காக 2023 மே மாதம் 21-22 ஆம் திகதிகளில் சவூதிக்குவிஜயம் செய்திருந்தார். இதன்போது இராஜாங்க அமைச்சர் அவர்கள் சவூதி அரேபிய வெளியுறவுத் துறையின் துணை அமைச்சரான கௌரவ வலீத் அல் கெரிஜியை சந்தித்து அரசியல் ஆலோசனைகளுக்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார்.

அப்போதைய சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தலைமையில் சவூதி அரேபிய பாராளுமன்ற நட்புறவுக் குழுவை இலங்கை பாராளுமன்றம் நிறுவியமையும் குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் கௌரவ பைசல் எப்.அலி இப்ராஹிம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 2023 நவம்பர் 27 அன்று சந்தித்து கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலின் போது, ஆடை உட்பத்தி மற்றும் சுற்றுலா உட்பட பல்வேறு துறைகளில் இலங்கையுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதில் சவூதி அரேபியாவின் தீவிர ஆர்வத்தை அமைச்சர் பைசல் எப்.அலி இப்ராஹிம் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு மே மாதம் இரு நாடுகளுக்கும் இடையிலான  கூட்டு ஆணையத்தின் முதல் அமர்வு இடம்பெற்றது, இதன் போது பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட 20 வெவ்வேறு துறைகளின் கீழ் ஒத்துழைப்பை நிறுவுவதற்காக 63 விடயங்கள் அடையாளம் காணப்பட்டன.

இலங்கையும் சவூதி அரேபியாவும் இடையில் கடந்த 2022-23 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சில இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

சவுதி அரேபியா மேம்மபாடுகளுக்கான சவூதி நிதியம் (SFD) மூலம் மென்-கடன் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 455 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது. கடன்களை மறுசீரமைப்பதற்கான தளங்களில், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, இலங்கைக்கு உதவுவதில் சவூதி அரேபியா முன்னனி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டில் 63000 இலங்கையர்களுக்கு சவூதியில் வேலை வாய்ப்புகளை வழங்கி சவூதி அரேபியா முன்னனி வகித்தது. ஒவ்வொரு ஆண்டும், 200,000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடுகளில் வேலை செய்ய இலங்கையை விட்டும் வெளியேறுகிறார்கள்.

கடந்த ஆண்டில் நிலவிய நிதி நெருக்கடியிலிருந்து மீள நாட்டிற்கான அந்நியச் செலாவணியினை ஈட்டித் தந்த முக்கிய அடிப்படையாக இது இருந்தமை மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆகவே இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையில் நிலவி வரும் இருக்கமான உறவானது மேலும் பல முன்னேற்றகரமான இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த பரிய பலமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதோடு இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டு வருவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும்.



# நஜ்மி ஆச்சிவ்ஸ் எவேர்ட் 2023

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு 12 வாழைத் தோட்டம் அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜூம்ஆப் பள்ளிவாசலின் 100 வருட பூர்த்தியை முன்னிட்டு கல்வியில் சாதனை படைத்தவர்களையும் பள்ளிக்கு சேவையாற்றியவர்களையும் கௌரவிக்கும் வகையில் நஜ்மி ஆச்சிவ்ஸ் எவேர்ட் 2023 எனும் தொணிப் பொருளில் நிகழ்வு மருதானை டவர் மண்டபத்தில் பள்ளிவாசலின் தலைவர் எம்.ஏ.எம். நிஸ்வான் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக அப்துல்லா சூ இன்டஸ்ரீஸ் உரிமையாளர் சீ.எம்.நூர், டி.எப். கோல்டிங்ஸ் பணிப்பாளர் ஏ.எம்.பசூல்டீன் மற்றும்



அல் ஹிக்மா கல்லூரியின் அதிபர்.எம். எம்.மஹ்சூம் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள், நலன் விரும்பிகள், உலமாக்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.விசேட பேச்சாளராக அகில இலங்கை ஜமிய்யதுல் உலமாவின் கொழும்பு மத்திய கிளையின் பிரதித் தலைவர் அல் ஹாபிழ் மௌலவி இர்ஸாட் உவைஸ் (இனாமி) கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது அல்-ஹிக்மா கல்லூரியில் கல்வி கற்று உயர் தரப் பரீட்சையில் மூன்று ஏ சித்திகளைப் பெற்று பல்கலைக் கழகம் சென்ற 5 மாவர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களின் பல்கலைக்கழக படிப்பிற்காக நலன் விரும்பி ஒருவரால் ஒரு மாணவருக்கு தலா ஒரு இலட்சம் வீதம் ஐவருக்கும் பணப்பரிசு வழங்கப்பட்டதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது ஏ சித்திகளைப் பெற்றவர்களுக்கும், தரம் ஐந்தாம் ஆண்டு பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் கான்றிதழ்கள் நினைவுச் சின்னங்கள், பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பள்ளிவாசலினால் நடாத்தப்படும் குர்ஆன் மத்ரஸாவில் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், நஜ்மி பாலர் பாடசாலையினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# கண்டி மீரா மக்காமில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகள்



(இக்பால் அலி)

76 வது சுதந்திரன தின விழா கண்டி மீரா மக்காம் பள்ளிவாசலில்

கண்டி நகர் பள்ளிவாசல்கள் சம்மேளனம். கண்டி மீரா மக்காம் பள்ளிவாசல் மற்றும் கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமா சபை ஆகிய இணைந்து நடத்திய 76 வது சுதந்திரன தின விழா கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாநகர சபையின் ஆணையாளர் சிஹான் விஜேயதிலக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் முன்னாள் கண்டி மாகர முதல்வர் சேகர சேனாநாயக, கண்டி மீரா மக்காம் பள்ளிவாசல் தலைவரும் கண்டி மாநகர சபையின் பிரதி முதல்வருமான இலாஹி ஆப்தீன், கண்டி நகர் ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி பாயிஸ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள். காவல்துறையினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நாட்டின் அபிவிருத்திக்கும் சுவிட்சத்திற்கும் விசேட துஆப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றது.

## நிசாந்தவின்..

(முன் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சனத் நிசாந்தவின் மனைவி சட்டத்தரணி சமரி பிரியங்கா பெரேராவை தேசிய பட்டியல் மூலம் நியமிப்பது குறித்து பொதுஜன பெரமுன தலைவர்கள் ஆராய்ந்து வருவதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவின் ஒரு உறுப்பினர் ஒருவரை பதவி விலக்கி அதற்கு பதிலாக சாமரியை நியமிப்பதற்கு கட்சி ஆராய்ந்து வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அடுத்து வரும் ஓரிரு தினங்களில் கணவருடைய அரசியல் பணிகளை முன்னெடுத்துச் செல்ல அரசியலில் தான் இறங்கப்போவதாக திருமதி சமரி தெரிவித்தார். மேலும் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுப்பதற்கு மொட்டுக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் பலரும் முன்வந்து இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன .

## ஈரானில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு 30 டொன் பேரீச்சம் பழங்களை அனுப்பி வைக்கவுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் பைசால் ஆப்தீன் தெரிவித்தார்.

சவுதி அரேபியா அரசாங்கம் 50 டொன் பேரீச்சம் பழங்களை அனுப்பி வைக்கவுள்ளதாக உறுதியளித்துள்ள இதே நேரம் முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் அமைச்சர் விக்கிரமநாயக்க ஊடாக முஸ்லிம் நாடுகளுக்கும், முஸ்லிம் அமைப்புகளும் பேரீச்சம் பழங்களை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாபக்கர்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

சமமான உடமைகளை கொள்வனவு செய்த பின்னரே அதனை விற்க முடியும் என முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசால் ஆப்தீன் தெரிவித்தார்.

பள்ளிவாசலின் சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதாக பாபகர் பள்ளிவாசலை சூழ வாழும் குழுவொன்று தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கு குறித்து கேட்ட போதே பணிப்பாளர் இதனை தெரிவித்தார்.

வக்ப் சொத்துக்களை விற்பதாக இருந்தால் அதன் பெறுமதிக்கு சமாந்தரமான உடமையை கொள்வனவு செய்து அதன் பின்பே விற்க வேண்டும் என்று, வக்ப் சட்டம் தெளிவாக கூறுகின்றது.

பள்ளிவாசலை நிர்வகிப்பதற்காக ஐந்து பேர் கொண்ட பணிப்பாளர்களை வக்ப் மேன்முறையீட்டு மன்றம் நியமித்துள்ளது. இந்த நியமனம் பள்ளிவாசலின் ஸ்தாபகருடைய விருப்பத்தின் பேரிலே இடம்பெற்று இருப்பதாக பணிப்பாளர் பைசால் தெரிவித்தார்.

இச் சொத்துக்களையும், பள்ளிவாசலையும் விற்பதாக நடத்தப்படும் பிரச்சாரங்கள் உண்மையில்லை எனவும் வக்ப் அறக்கட்டளை சட்டப்படி இப்பள்ளிவாசலை விற்க முடியாது என அவர் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு மன்றம் இந்த பள்ளிவாசலின் பணிப்பாளர் சபையில் கூட்டு இணைக்கப்பட்டிருக்கின்ற ஒரு நிறுவனத்திற்கு புதிதாக எவரையும் உள்வாங்க ஸ்தாபகருடைய அனுமதி இருக்க வேண்டும். வக்ப் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவே பாபகர் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் எவருக்கும் இதனை சவாலுக்கு உட்படுத்த முடியாது. உரிமை கோரவும் முடியாது என்று தெரிவித்த பணிப்பாளர் அறக்கட்டளை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை அதன் சட்ட ரீதியான நம்பிக்கையாளர்களாலேயே முன்னெடுக்க முடியும் என தெரிவித்தார்.

முன்பிருந்த அறக்கட்டளை சட்டப்படி பாபகர் அறக்கட்டளையினை விற்பனை செய்ய முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இருக்கின்ற அறக்கட்டளை சட்டப்படி இதனை விற்பனை செய்ய முடியாது.

இந்த பாபகர் வக்ப் செய்துள்ள காணி விற்கப்படமாட்டாது என நம்பிக்கை பொறுப்பாளர்கள் உறுதியளித்துள்ளார்கள். மேலும் அபிவிருத்தி திட்டங்களை அவர்கள் முன்னெடுக்க முடியும் எனவும் பணிப்பாளர் பைசால் ஆப்தீன் தெரிவித்தார்.

# கொழும்பு பள்ளிவாசல் சம்மேளன சுதந்திர தின வைபவம்



(அஷ்ரப் ஏ சமத்)

மருதானை பள்ளிவாசல்கள் சமமேனமும் இலங்கை ஜம்இயதுல் உலமாவின் மத்திய கொழும்பு பிரிவும் கொழும்பு அல்ஹிதாயா கல்லூரியும் இணைந்து நடத்திய 76ஆவது சுதந்திர தின நிகழ்வு 04.02.2024 காலை 08.00மணிக்கு அல் ஹிதாயா கல்லூரியில நடைபெற்றது.

இந் நிகழ்வில் கொழும்பு மாவட்ட பள்ளிகள் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன் பிரதம அதிதியாகவும் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் எம்.சி பஹார்தீன் அகில இலங்கை ஜமமியத்துல் உலமாவின் கொழும்பு மாவட்ட தலைவர் அஷ்ஷேக் முக்ஸித் அஹமத் கல்லூரியின் அதிபர் திருமதி ஏ.எப் ஸருனா , தெஹிவளை கல்கிசை பள்ளிச் சம்மேளனத் தலைவர் இஸ்மாயில் ஹாஜி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர்கள் அகில இலங்கை ஜமமியா உலமா பிரநிதிகள் அல்ஹிதாயா பழைய மாணவர் சங்கய பிரநிதிகள் கல்லாரியின் அதிபர் உதவி அதிபர்கள் பகுதித் தலைவர்கள் ஆகியோர்கள் சமுகப் பங்களிப்புக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்ட்டனர்






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# கேள்விக்குறியாகும் இம்ரான் கானின் அரசியல் எதிர்காலம்..!

பாகிஸ்தானில் பிப்ரவரி 8ம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு, அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றத்துக்காக 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் செவ்வாய்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

பிப்ரவரி 8ம் தேதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான பிரச்சாரங்கள் சூடுபிடிக்க தொடங்கியுள்ளது. இந்நிலையில், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் பி.டி.ஐ கட்சியின் துணைத் தலைவர் ஷா மெஹ்மூத் குரேஷி ஆகியோருக்கு அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றத்துக்காக (சைஃபர் கேஸ் என்று பிரபலமாக அறியப்படுகிறது) 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் செவ்வாய்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

இது நீதியின் கொலை" என்று மனித உரிமை ஆர்வலரும், அரசியல் ஆய்வாளருமான தௌசீப் அகமது கான் கூறியுள்ளார். அதோடு, இம்ரான் கானின் வழக்கறிஞர் நயீம் பஞ்சுதா இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில், "இந்த சட்டவிரோத முடிவை நாங்கள் ஏற்க மாட்டோம்" எனப் பதிவிட்டுள்ளார்.

கடந்த 2018-ம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும், முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சி (பிடிஐ) தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. இதையடுத்து பிற கட்சிகளின் ஆதரவுடன் இம்ரான் கான் பிரதமரானார். அவரது தலைமையிலான கூட்டணியிலிருந்து விலகிய முக்கியக் கட்சி ஒன்று, எதிர்க்கட்சியுடன் இணைந்தது. இதனால் நாடாளுமன்றத்தில் இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அந்த வழக்கை இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றம் விசாரித்து வந்தது. இந்நிலையில் அந்த வழக்கில் இம்ரான் கான் குற்றவாளி என்று உறுதி செய்த நீதிமன்றம் அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கியது. மேலும் அவர் அரசியலில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எவ்வித தேர்தலிலும் போட்டியிட இயலாத வண்ணம் தகுதியிழந்தார். இதையடுத்து, பரிசுப்பொருள் வழக்கில் விதிக்கப்பட்ட 3 ஆண்டுகள் சிறைக்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. எனினும், இம்ரான் கான் மீது நில மோசடி, கருவூல ஊழல் மற்றும் அரசு ரகசியங்களை கசியவிட்டது உள்ளிட்ட அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

கடந்த ஆண்டு டோஸ்கானா வழக்கில் இம்ரான் கான் 3 ஆண்டு தண்டனை பெற்ற நிலையில் தற்போது இத்தனை பெரிய சிறை தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.இதையடுத்து இம்ரான் கான் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. நில மோசடி, தோக்ஷகானா எனும் கருவூல ஊழல், அரசு ரகசியங்களை கசியவிட்டது, அரசு சொத்துகளை தவறாக பயன்படுத்தியது என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனாலும் இம்ரான் கான் வெளிவர முடியவில்லை. ஏனென்றால் இன்னொரு வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார். அதாவது பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தில் பிரதமராக இருக்கும் நபர் உயரதிகாரிகளுடன் விரைவாக பேசும் வகையில் சைபர் கேபிள் சேவை பயன்பாடு உள்ளது. இந்த கேபிள் சேவையை இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது தவறாக பயன்படுத்தியதாக எழுந்த புகாரை தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டார்.இந்நிலையில் தான் இம்ரான் கான் மீதான சைபர் கேபிள் முறைகேடு வழக்கில் பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அதன்படி இம்ரான் கான் மற்றும் அவரது நெருங்கிய கூட்டாளியான முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் மஹ்முத் குரேஷி ஆகியோருக்கு தலா 10 ஆண்டு சிறை தண்டனை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் இம்ரான் கானின் அரசியல் வாழ்க்கை என்பது அஸ்தமனமாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் சட்ட நடைமுறையின் படி குற்ற வழக்குகளில் தண்டிக்க பட்டவர் தேர்தலில் போட்டியிட மிக கடுமையான தடை இருக்கிறது. இந்நிலையில் தான் இம்ரான் கானுக்கு எதிராக வழங்கப்பட்ட எல்லா தீர்ப்புகளும் கீழமை நீதிமன்றத்தில் இருந்து தான் என்பதால் அவர் தமக்கான நீதியை பெற உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்ய அதிகாரம் உள்ளது. தற்போதைய நிலையில் அவர் வரும் பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் பங்கு பெற வாய்ப்புகள் இல்லை என்றால் இதோடு அவரது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வரலாம் என்கிற கருத்தும் ஒருபுறம் நிலவி வருகிறது.

தோஷகானா மற்றும் சைபர் வழக்குகள் மிக சிக்கலான நிலைமையை அவருக்கு ஏற்படுத்தியதால் உண்மையில் இம்ரான் அரசியல் வாழ்க்கை கர்ணம் தப்பினால் மரணம் என்கிற சிக்கலை அவர் எதிர் கொள்ளும் அபாயம் தெளிவாக தெரிகிறது.

இம்ரான் கான் மீது ஊழல் மற்றும் கொலை முயற்சி வழக்குஉள்ளிட்ட 170 வழக்குகள் உள்ளன. மே 2023 இல் அவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தின் மீதான தாக்குதல்களுக்கு அவர் உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால், இம்ரான் கானுக்கு எந்த நேரத்திலும் நிவாரணம் கிடைக்க வாய்ப்பில்லை என்பதும், ஒரு நீதிமன்றத்தில் இருந்து மற்றொன்றுக்கு மாற்றப்பட வாய்ப்பு உள்ளது என்பதும் தெளிவாகிறது.

அதேநேரத்தில் ஷேபாஸ் ஷெரீப் மற்றும் மரியம் நவாஸ் தலைமையில் கொந்தளிப்பான காலகட்டத்தை நவாஸ் ஷெரீப் கட்சி கடந்ததை போன்ற நிலை இம்ரான் கானின் தெஹ்ரீக்கே இ இன்ஷாப் கட்சிக்கு அறவே இல்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், தெஹ்ரீக்கே இ இன்ஷ ாப் கட்சி இம்ரான் கான் என்கிற தனிப்பட்ட ஆளுமையை முன்னெடுத்துச் செல்வதால், அவரது தொய்வுக்கு பின் அந்த கட்சியை தெளிவாக வழிநடத்த யாரும் இல்லை என்பதே உண்மையாகும்.

இம்ரான் கான் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், ஷிரீன் மசாரி மற்றும் ஃபவாத் சவுத்ரி உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்கள் அவரது கட்சியில் இருந்து வெளியேறி வருவதை காண கூடியதாக இருக்கிறது. உண்மையில் இது வரை சுமார் 150 க்கு மேற்பட்ட தலைவர்கள் மற்றும் தொழிலாளர்கள் கட்சியை விட்டு வெளியேறியுள்ளனர். இஸ்லாமாபாத் உயர் நீதிமன்ற வளாகத்தில் ஊழல் வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மிகப்பெரிய கலவரம் நடந்தது. இந்த கலவரத்தின் போது 2023 ஆம் ஆண்டு மே 9 ஆம் தேதி, பாகிஸ்தான் முழுவதும் அரசு கட்டிடங்கள் மற்றும் ராணுவ நிலையங்களை பாகிஸ்தான் தெஹ்ரீக்கே இ இன்ஷாப் கட்சியின் தொண்டர்கள் சேதப்படுத்தியதால் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான கட்சி உறுப்பினர்கள் தடுத்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் இம்ரான் கான் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க வலிமையான தலைவர் இல்லாத இக்கட்டான நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இடைக்காலத் தலைவர் ஷா மெஹ்மூத் குரேஷி, கொந்தளிப்பான காலங்களில் கூட, சமூக ஊடக தளங்கள் மூலம் தனது ஆதரவாளர்களுடன் தொடர்பில் இருந்தாலும் இம்ரான் கானைப் போன்ற கவர்ச்சியும் வெகுஜன ஈர்ப்பும் இல்லாத காரணத்தினால் கட்சி நிச்சயமாக வலுவிழந்து போகும் அபாயம் முழுமையாக அக்கட்சியின் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது. மிகுந்த கிரிக்கெட் நேசர்களை கொண்ட பாகிஸ்தான் நாட்டின் கவர்ச்சி மிக்க அரசியல் தலைவராக உருவான இம்ரானின் கட்சிக்கு வழங்கப்பட்ட கிரிக்கெட் பேட் சின்னத்தை உச்சநீதிமன்றம் நீக்கி உள்ள நிலையில் தேர்தல் ஆணையம் பாட்டில் சின்னத்தை வழங்கி உள்ளது இந்த பாட்டில் சின்னம் மதுவுடன் தொடர்பான ஒன்றாக பலராலும் பார்க்கப்படுகிறது. கட்சியினர் தேர்தல் பிரச்சாரம் செய்யவில்லை, தலைவர்கள் பேரணிகளை நடத்த விடாமல் தடுக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.யுகீ இன் ஒரு அறிக்கையின் படி பாகிஸ்தான் தெஹ்ரீக்கே இ இன்ஷாப் கட்சியின் வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தேர்தல் ஆணையத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானை பொருத்தவரை எந்தவொரு அரசாங்கமும் சக்திவாய்ந்த இராணுவத்தின் உதவியுடன் தான் இயங்கி ஆக வேண்டும் என்பதில் எந்தவொரு மறைமுகமான ரகசியமும் கிடையாது என்பதை அந்த நாட்டின் அரசியலை நன்கு அறிந்தவர்களுக்கு ஆச்சரியம் ஏதுமில்லை. அதே நேரத்தில் சட்ட சிக்கல்களில் இருந்து இம்ரான் கான் வெளியே வந்தாலும், இராணுவத்திற்கு எதிரான அவரது கடுமையான அறிக்கைகளைத் தொடர்ந்து மீண்டும் பாகிஸ்தான் இராணுவத்துடன் தொடர்பு வைத்து கொள்வது அவ்வளவு எளிதாக இருக்காது என்பதே உண்மை.

2018 ம் ஆண்டு இம்ரான் கான் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.அந்த காலகட்டத்தில் இராணுவம் அவருக்கு நம்பகமான கூட்டாளியாக செயல்பட்டு இருக்கலாம். அப்போது அவர்களுக்குள் எந்தவொரு உறவு விரிசலும் காணப்படவில்லை.அதன் பிறகு 2022 ம் ஆண்டு ஐ எஸ் ஐ அதிகாரி ஒருவர் மூலம் அவர் கொல்லப்படுவதற்கு சதிகள் நடந்ததாக இம்ரான் கான் குற்றம் சுமத்தி இருந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது . அதன் பின்னர் இம்ரான் கான் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் இம்ரான் கானுக்கு இராணுவத்துடன் இருந்த உறவுகள் முழுமையாக வலுவிழந்து போய் விட்டது. புதிய ஐ எஸ் ஐ இயக்குநர் ஜெனரலை நியமிப்பதிலும், உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதல் குறித்து மாறுபட்ட நிலைப்பாடு குறித்தும் கருத்து வேறுபாடுகள் அவர்களுக்குள் உருவாகத் தொடங்கின.

2022 ம் ஆண்டு இம்ரான் கான் வெளியேற்றப்பட்ட பிறகு இராணுவத்தின் மீதான இம்ரான் கானின் தாக்குதல்கள் அதிகரித்தன. மேலும் அவரைக் கவிழ்க்க ஒரு "மேற்கத்திய ஆதரவு சதி" திட்டமிட்டதற்காக அவர் இராணுவ தலைமையை வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார். 1987 ம் ஆண்டு, அப்போது 35 வயதான இம்ரான் கான், உலகக் கோப்பையில் பாகிஸ்தான் அரையிறுதியில் வெளியேறிய பிறகு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இருப்பினும், அவர் ஒரு வருடம் கழித்து தனது முடிவை மாற்றிக்கொண்டார். அதேநேரத்தில் 1992 ம் ஆண்டு தனது முதல் மு னு ஐ உலகக் கோப்பை பட்டத்தை பாகிஸ்தான் அணி வெற்றி பெற உதவுவதற்காக பாகிஸ்தான் கேப்டனாக இம்ரான் கான் மீண்டும் கிரிக்கெட் விளையாட்டில் பங்கு பெற களத்திற்கு திரும்பினார்.

மார்ச் 2022இல் அமெரிக்காவில் அந்நாட்டு உயர் மட்ட அதிகாரிகளுடன் பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதர் முக்கியமான பேச்சுவார்த்தை ஒன்றில் பங்கேற்றார். அப்போது அங்கு பேசப்பட்ட முக்கிய விவகாரங்கள் உள்ளடங்கிய ரகசிய ஆவணங்களை இஸ்லாமாபாத்திற்கு அனுப்பி வைத்தார். இது தான் மிகுந்த சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. அதனைத் தொடர்ந்து இம்ரான் கான் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற கட்சி பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார். மேடையில் பேசிய இம்ரான் கான் தனது ஆட்சியைக் கவிழ்க்க வெளிநாட்டு சக்திகள் திட்டம் போடுவதாகக் கூறி தனது சட்டைப் பையில் இருந்து ஒரு காகிதத் துண்டை வெளியே எடுத்துக் காட்டினார். அப்பட்டமாக அவர் பொது மேடையில் பேசியது யாருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தாது.ஏனெனில் கடந்த காலங்களில் இது தான் பாகிஸ்தான் அரசியல் வரலாறாக பதிவு செய்யப்பட்டுள்ளது. என்னை ஆட்சியில் இருந்து நீக்கினால் நீங்கள் அனைவரும் மன்னிக்கப்பட்டு விடுவீர்கள் என்று அந்த கடிதத்தில் எழுதப்படும் இருந்ததாக கூறிய இம்ரான் இந்த சதியின் பின்னணியில் எந்த நாடு உள்ளது என்பதை வெளிப்படையாக தெரிவிக்க இம்ரான் கான் மறுத்து விட்டார். அதே நேரம், இம்ரான் கான் அமெரிக்காவை விமர்சிக்கவும் தவறவில்லை. இந்தச் சம்பவம் இம்ரான் கான் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு நடந்தது. தன்னை ஆட்சியில் இருந்து அகற்ற சதி வேலை நடப்பதாக இம்ரான் கான் முன்வைத்த குற்றச்சாட்டை அமெரிக்கா முழுமையாக நிராகரித்தது. பாகிஸ்தான் தூதர் இஸ்லாமாபாத்திற்கு அனுப்பிய ரகசிய தூதரக கடிதங்களை பொதுவெளியில் பிரதமரே பேசியது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதன் பின்னணியிலும் அமெரிக்கா இருப்பதாக இம்ரான் கான் சந்தேகம் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் பாகிஸ்தானின் அரசியல் ஸ்ரத்தன்மையை பார்க்கும் போது மிகுந்த பரிதாபமாக உள்ளது . எந்தவொரு தேசமும் அரசியல் ஸ்ரத்தன்மையை இல்லாத நிலையில் அதன் வளர்ச்சி எட்டாக் கனியாகவே இருக்கும். பாகிஸ்தான் இராணுவம் ஜனநாயக மாண்புகள் இல்லாத நிலையை அங்கு தொடர்ந்து உருவாக்கி வருகிறது. ஏற்கனவே மத அடிப்படைவாதம், வறுமை, வேலையின்மை அதிகரிப்பு, அந்நிய கடன்கள் என இது போன்ற நிலை பாகிஸ்தானில் இன்றும் தொடர்கிறது.. இதற்கு மிக முக்கியமான காரணம் பாகிஸ்தான் அரசியல் அடிப்படை கட்டமைப்புகள் என்பதை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது . முதலில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சி நடைபெறும் தேசமா அல்லது மக்கள் ஜனநாயக தேசமா என்பதே யாருக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது. இது போன்ற குழப்பங்கள் நீங்கும் வரை அங்கே அரசியலில் ஸ்ரத்தன்மையை உறுதிப்படுத்துவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. இது போன்ற அபாயகரமான சூழலில் ஒரு தேசம் சிக்கி தவிப்பது ஜனநாயக செயல்பாடுகளை விரும்பும் ஒவ்வொரு தனி மனிதனையும் உண்மையில் கவலை கொள்ளச் செய்யும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை என்பதை மட்டுமே இந்த தருணத்தில் நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

# அமானா வங்கி தனது வளர்ந்து வரும் கிளை வலையமைப்பில் புதிதாக வெலிசற சுய வங்கிச் சேவை நிலையத்தை அறிமுகம் செய்துள்ளது






நாடு முழுவதிலும் சமூகத்தாருக்கு இலகுவில் அணுகக்கூடிய மற்றும் சௌகரியமான வங்கிச் சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அமானா வங்கியின் நோக்கத்துக்கமைவாக, வெலிசர பகுதியில் தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. வெலிசர பகுதியில் அமைந்துள்ள Phoenix காட்சியறை வளாகத்தில் இந்த சுய வங்கிச் சேவை நிலையம் நிறுவப்பட்டுள்ளதுடன், இது அமானா வங்கியின் 59 ஆவது வாடிக்கையாளர் பிரசன்ன அமைவிடமாகவும் அமைந்துள்ளது.

அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், வியாபார வங்கியியல் உப தலைவர் இர்ஷாத் இக்பால், கூட்டாண்மை வங்கியியல் உதவி உப தலைவர் ராஜேந்திர ஜயசிங்க, Phoenix பிரதம செயற்பாட்டு அதிகாரி புதித லேகம்ஆரச்சி மற்றும் வங்கியினதும் Phoenix இனதும் ஊழியர்களின் பிரசன்னத்தில் சுய வங்கிச் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

வெலிசர சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக எவ்வேளையிலும் பணத்தை மீளப் பெறுவது, வைப்புச் செய்வது மற்றும் காசோலை வைப்பு போன்ற வசதிகள் வழங்கப்படும்.

இந்த விரிவாக்கம் தொடர்பாக அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "எமது சேவை வலையமைப்பை வெலிசர பகுதிக்கும் விஸ்தரிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். புதிய மெருகேற்றத்துடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ள Phoenix காட்சியறையில் சுய வங்கிச் சேவை நிலையத்தை நிறுவியுள்ளோம். அதனூடாக எமது மக்களுக்கு நட்பான வங்கி மாதிரியை தொடர்ந்தும் விரிவாக்கம் செய்த வண்ணமுள்ளோம். சமூகத்தாருக்கு வங்கிச் சேவைகளை அதிகம் அணுகக் செய்வது மற்றும் அவர்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எனும் எமது நோக்கத்துக்கமைய இந்தத் திட்டம் அமைந்துள்ளது." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 100 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக த ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

வெலிசர சுய வங்கிச் சேவை நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் மற்றும் Phoenix பிரதம செயற்பாட்டு அதிகாரி புதித லேகம்ஆரச்சி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# அஹதிய்யா பாடசாலைக் கல்வி மாணவர்களை நல்வழியில் வாழ வழியமைக்கிறது

## ஹாஜி எம் ஹலீம்தீன் தெரிவிப்பு



அஹதிய்யா பாடசாலைக் கல்வி மாணவர்களை நல்வழியில் வாழ வழியமைக்கிறது என உக்குவளை அஹதிய்யா பாடசாலை அதிபரும் முன்னாள் பிரதி அதிபருமான ஹாஜி எம் ஹலீம்தீன் தெரிவித்தார்.

உக்குவளை அஹதிய்யா பாடசாலை அதிபர் ஹாஜி எம்.ஹலீம்தீனின் ஏற்பாட்டில் மாணவ மாணவியர்கள் வுழூவூச் செய்தலுடன் ஐவேளை தொழுகைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது பற்றிய பயிற்சி வழிகாட்டல் நிகழ்ச்சிகள் உக்குவளை அஜ்மீர் முன்றலில் நடாத்தப்பட்டது இதன்போது அவர்களை அறிவூட்டும்வகையிலேயே அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிக்கையில்,

ஞாயிறுதோறும் காலை 8 மணிமுதல் 12 மணிவரை சுமார் நான்கு மணிநேரம் வரை நடாத்தப்பட்டுவரும் இந்த அஹதிய்யா பாடசாலையில் மாணவராகளாகிய நீங்கள் சன்மார்க்க விபரங்களை நன்கு கற்று செயலாற்றவேண்டும் எமது இஸ்லாத்தில் தொழுகை மிக முக்கியத்துவமானது சுவர்க்கத்தின் திறவுகோள் தொழுகை என்பதால் அதனை நிறைவேற்றுவதில் முதலில் நிய்யத், உட்பட வுழூவு, தொழுகை ஆகிய கிரியைகள் முறையாக செய்யப்படவேண்டியுள்ளது அவைகள் பற்றிய அறிவு அவசியம் என்பதால் இதுவிடத்தில் எமது மாணவர்களான உங்களுக்கு எமது மௌலவி ஆசிரியர்கள் மூலமாக இந்த பயிற்சி செயலமர்வு நடத்தப்படுகிறது இதைகுறித்து பெற்றோர்களும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர் இதுபோன்ற ஏனைய கிரியைகளுக்கான பயிற்சிகளும் எதிர்க்காலங்களில் வழங்கப்படவுள்ளன.

இதுபோன்ற செயலமர்வுகள் ஏனைய அஹதிய்யா பாடசாலைகளிலும் நடாத்தப்படவேண்டும் அந்தவகையில் அஹதிய்யா பாடசாலைக் கல்வி மாணவர்களை நல்வழியில் வாழவைக்க உதவுகிறது எனினும் கவலை என்னவென்றால் ஞாயிறு தினங்களில் தனியார் நடாத்தும் வகுப்புகளால் அஹதிய்யா பாடசாலைகளுக்கு மாணவர்களது வரவு குறைவடைவதுதான் இதுவிடயத்தில் தனியார் வகுப்புகளை நடாத்துவோர் ஞாயிறு தினத்தை மட்டும் விடுமுறையாகக் கொண்டு அத்தினத்தை அஹதிய்யா பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்ப வசதி செய்துகொடுக்க முன்வரவேண்டும் என அவர்களை வேண்டிக் கொள்கிறேன் பெற்றோர்களும் இதுவிடயத்தில் அக்கறை காட்டுவார்களென நம்புகிறேன்.

சில அரச பாடசாலைகளில் இஸ்லாம் கற்பித்தல் மட்டும்தான் எனினும் பயிற்சிகள் காண்பதற்கில்லை இந்நிலையில் அஹதிய்யா பாடசாலைகள் மூலமாக இவ்வாறான பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்படுவது மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனமளிப்பதாகவுள்ளது எனவே மாணவர்கள் தவறாமல் அஹதிய்யா பாடசாலைகளுக்க சமூகமளிக்கவேண்டும் சன்மார்க்க பண்பாடுகளைக் கற்பித்துக்கொடுக்கும் அஹதிய்யாவில் மார்க்க விவகாரங்களில் கற்றுத் தேறிய மாணவர்கள் சிலர் முக்கிய துறைகளில் அமர்ந்து பண்புகளோடு கடமைபுரிவது கண்டு நாம் பெருமிதமடைகிறோம் அஹதிய்யா பாடசாலைகள் எம் சமூகத்துக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும் - என்றார்.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## சிந்திப்போம் செயல்படுவோம்

முஸ்லிம்கள் மத்தியில் தற்கொலை செய்து கொள்வது மிக குறைவாகும் அதற்கான காரணம் முஸ்லிம்களுக்கு பிரச்சினை இல்லை என்பதல்ல. பிரச்சினைகளை தாங்கிக் கொள்ளும் சக்தி உண்டு.

அதனால் தற்கொலைக்கு செல்ல மாட்டாஉகள் என்பதும் அல்ல. காரணம் இஸ்லாம் தற்கொலையை தடை செய்துள்ளமையாகும். கொலை செய்வதற்கு தண்டனை மரண தண்டனை எனக் கூறும் இஸ்லாம் தற்கொலையை அனுமதிக்கவில்லை. தடை செய்துள்ளது. மரணத்தின் பின் சொர்க்கம் நரகம் என்பவற்றை நம்பியுள்ள முஸ்லீம்கள் நரகம் செல்ல விரும்புவதில்லை. எனவே, தடை செய்துள்ள தற்கொலையை எவராது செய்து கொள்வார்கள் என்றால் அவர்களது மனநலையின் பாதிப்பு ஒரு காரணமெனலாம். அல்லது திடீர் தீர்மானம் எடுக்கும் தன்மை எனலாம்.

இவ்வாறான ஒரு தற்கொலைக்கு தள்ளப்பட்டவர் தன்னால் தாங்க முடியாத நிலையிலும் இஸ்லாம் பற்றிய தெளிவும் அறிவும் இல்லாத நிலையிலும் இதற்கு முனையலாம்.

பதுளை மாவட்டத்தில் வசிக்கும் ஆயிஷா பர்வீன் என்ற மாணவி கடந்த வாரம் தற்கொலை செய்து கொண்ட விடயம் கேள்விப்பட்ட மக்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது காரணம் அவர் தற்கொலை செய்து கொள்ளக் கூறிய காரணமாகும்.

இந்த மாணவி தரம் 11 கல்வி கற்பவஉ. அதாவது கா.பொ.த. சாதரண தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்ற இருப்பவர். சாதாரணமாக ஒரு இளம் யுவதி தற்கொலை செய்து கொண்டால் காதல் பிரச்சினை என்று நினைத்துக் கொள்வவஉ. இளம் யுவதியை காணவில்லை என்றால் எவருடனாவது சென்றிருப்பார் என்றும் நினைப்பதுண்டு.

ஆனால் இந்த மாணவியின் தற்கொலைக்கு காரணம் வித்தியாசமானதும் கவலை தருவதாகும்.

இந்த மாணவி பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருப்பவர் அவருக்கு பிரத்தியேக வகுப்புகொன்றுக்கு செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இப்போதைய காலத்தில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு பிரத்தியே வகுப்புகள் செல்லும் தேவை ஏற்பட்டு உள்ளது. பாடசாலையில் குறிப்பிட்ட பாடங்கள் சரியாக நடக்காவிட்டால் அல்லது அதற்கு ஆசிரியர் இல்லாவிட்டால் அந்த பாடத்திற்காக பிரத்தியேக டியுஷன் சொல்ல வேண்டி ஏற்படும். அப்போதுதான் சித்தியெய்த முடியும். இந்த மாணவியும் பதுளை மாநகரத்தில் கற்கும் மாணவி அல்ல. ஒரு கிராமத்தில் கற்கும் மாணவி அவருக்கு டியூஷன் வகுப்புகள் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பரீட்சையில் சித்தி அடைய வேண்டும் என்ற ஆசையுடன் இந்த மாணவி டியூஷன் வகுப்புக்கு போக வீட்டில் பணம் கேட்டுள்ளார் பெருந்தொகையும் அல்ல. ரூபா 500 தான் தாயிடம் கேட்டு, தாய்த் தகப்பனிடம் சொல்ல தகப்பனும் பணம் இல்லை என மறுத்துள்ளார்.

அந்த மாணவியும் பணம் கேட்டு கெஞ்ச தர முடியாது என்று கூறிய தந்தை நான் வீட்டிலிருந்து எங்காவது போய் விடுவேன் என்று கூற, இது பிரச்சினையாகி விட்டது. இதில் மனம் பாதிக்கப்பட்ட மாணவி தனது உறவினர் பாவிக்கும் மருந்து வில்லைகளை தொகையாக விழுங்கி இருக்கிறார். இந்த மாணவியை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார்கள். அங்கு அவர் காலமானார்.

கல்வி ஆர்வமுள்ள ஒரு கிராமத்து மாணவியை சமூகம் இழந்துவிட்டது.

இந்த சம்பவத்துக்கு பலர். காரண கர்த்தவாகி விட்டனஉ என்று கூறவேண்டும். ஊரில் மார்க்கத்தை போதிக்கும் உலமாக்களுக்கு பங்கு உண்டு. தற்கொலை செய்து கொள்வதை

இஸ்லாம் அனுமதிப்பதில்லை என்பதை சரியாக மக்களுக்கு விளங்க வைக்க வேண்டும். இந்த போதனை சரியாக இளைஞர்களுக்கு யுவதிகளுக்கும் போய் சேரவில்லை என்று கூற வேண்டும்.

தற்கொலை செய்து கொள்பவருக்கு மறுமையில் உள்ள தண்டனை என்ன என்பதை உணர்ந்தால், எவரும் தற்கொலை செய்து கொள்ள மாட்டார்கள். ஏனெனில் மறுமையில் நம்பிக்கை வைத்து வாழ்பவர்கள முஸ்லிம்கள், தனவந்தர்களும், வசதி உள்ளவர்களுக்கும் பொறுப்பு சொல்லும் பங்கு உண்டு. சில்லறைகளை மாற்றி வைத்துக் கொண்டு வெள்ளிக்கிழமை உதவி கேட்பவருக்கு வரிசையாக நிறுத்தி கொடுக்கும், அந்த சில்லறையை குறித்து பெருமைப்படும் சிலர் கல்விக்கு ஏங்கும் பிள்ளைகளுக்கு உதவுவதில் முன் நிற்பதில்லை. பிள்ளைகளுக்கு கல்விக்கு வழங்க வேண்டும் என்று ஆசையுள்ள, எனினும் செலவழிக்க பணம் இல்லாத பெற்றோருக்களுக்கு இவர்கள் உதவுவதாக இல்லை. பள்ளி கட்டுவதில் நன்மை உண்டு.

அது அல்லாஹ்வின் மாளிகை. ஆனால் உள்ளதை உடைத்து மீண்டும் மீண்டும் அழகுபடுத்துவதை சற்று பிற்போட்டு, கல்வியை தேடி அழுது திரியும் பிள்ளைகளுக்கு உதவினால் என்ன. வகுப்புகளுக்கு செல்ல வசதியில்லாதவர்களுக்கும், உடுப்பு, சப்பாத்து இல்லாது கஷ்டப்படுபவர்களும், போக்குவரத்து செலவு பணம் இல்லாத மாணவர்களுடன் எவ்வளவோ இருக்கிறார்கள். எங்கும் இருக்கிறார்கள். சாப்பாடு இல்லாமல் பாடசாலைக்கு சென்று மயக்கம் அடைபவர்களும் இல்லாமல் இல்லை.

இதுபோன்ற ஊர்களில் உள்ள கல்விமான்களும் ஆசிரியர்களும் சிந்திக்க வேண்டும் அவர்கள் வேறு ஊர்களில் தொழில் செய்தாலும் தமது ஊர் மாணவ, மாணவிகள் தனது கல்வி சேவையை வழங்கலாம். வகுப்புகளை ஏற்பாடு செய்து தமது ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நேரங்களிலும் கற்பிக்கலாம். பணம் கொடுத்து உதவ முடியாதவஉகள் இந்த சேவை வழங்கலாம்.

பெற்றோர்களுக்கும் ஒரு கடமை உண்டு. பிள்ளைகளுடன் அன்பாக இருக்க வேண்டும். அன்புடன் நடந்து கொண்டால் அவர்கள் பெற்றோரின் மனநிலையும் சூழ்நிலைகளையும் உணர்ந்து கொள்வார்கள். அடம் பிடிப்பதை விட்டு விடுவார்கள். வசதி குறைந்த ஏராளமான பெற்றோர்கள் நாட்டில் இருக்கின்றனர்.

அவர்களது பிள்ளைகளுக்கு தேவைகள் இல்லாமல் இல்லை. எனினும் அன்பாக நடந்து, அன்பாக சொன்னால் அவர்கள் புரிந்து கொள்கின்றனர். பெற்றோர் அன்புடன் இருந்தால் பிள்ளைகளும் அன்பை காட்டுவர். பணம் கேட்டு பிள்ளைகளுக்கு பணம் இல்லாவிட்ட அன்புடன் அதை கூறவேண்டும். அதை விட்டு விட்டு, "நான் வீட்டை விட்டு போகிறேன்" என்பது சரியான பதில் இல்லை. அவர்களது தகப்பன்

போய்விடுவார் என்று பிள்ளை யோசித்து இருக்கலாம். நாம் பணம் கேட்டால் தகப்பன் குடும்பத்தை விட்டு விட்டு போய்விட்டால் என்ன நிலை ஏற்படும் அதை தான் எவ்வாறு முகம் கொடுப்பது என்று அந்த மாணவிக்கு நினைத்திருக்கலாம்.

இதுபோன்றே பேருக்கும், புகழுக்கும் உதவி செய்யும் மக்கள், இதுபோன்ற விடையங்களை சிந்திக்க வேண்டும். உலமாக்கள் சரியாக மனதில்படும் படி சரியான உபதேசங்களை புரிய வேண்டும். இளைஞர் யுவதிகளுக்கு சரியான வழிகளை காட்டுவதோடு உங்களில் இஸ்லாமிய அறிவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர், யூவதிகளுக்கு மார்க்கம் மட்டுமல்ல சமூக அறிவியல் வழங்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாழ்வது எப்படி, விட்டுக்கொடுத்தல் எப்படி இருக்க வேண்டும், மற்றவர்களுக்கு உதவி செய்வது, உதவுவது என்பதை கற்பிக்க வேண்டும். குடும்ப உறவுகள் பற்றி பயிற்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். முஸ்லிம் கிராமங்கள் தோரும் கல்விக்கு உதவ அமைப்புகளை ஏற்படுத்தப்பட வேண்டும். பள்ளி பரிபாலன சபை சங்கங்கள் போன்று கல்விக்கு உதவும் சங்கங்களையும் அமைக்கப்பட வேண்டும். இவை மூலம் வசதி குறைந்த மாணவ மாணவிகளுக்கு கல்வி தேவைக்கு உதவ வேண்டும். ஊர் பாடசாலையில் மேலதிக வகுப்புகளை ஏற்பாடு செய்ய வேண்டும். ஊரில் உள்ள அனைவரும் வசதி குறைந்தவர்களாக இருக்க முடியாது. எனவே உள்ளவர்களிடம் பணம் பெற்று பொதுவாக எல்லோரும் கற்க மேலதிக வகுப்புகளை ஆரம்பிக்கலாம். தனது பணத்தால் மற்ற ஏழைகளும் படிக்கிறாஉகள் என்ற மனநிலை ஏற்பட்டு சந்தோஷப்படும் நிலையை வசதி உள்ளவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

எனவே ஊரில் உள்ள கல்விமான்கள், இளைஞர்களும் வசதி உள்ளவர்களும் சேர்ந்து திட்டமிட்டால் ஊர் முன்னேற்றும் முயற்சியும் ஆசையுமுள்ள மாணவஉகள் உயர்வடையும் நிலை ஏற்படும். அடுத்து வரும் பரம்பரைக்கு வழிகாட்டலாகவும் அமையும். அதுமட்டுமல்ல துரதிஷ்ட சம்பவங்களையும் இல்லாது செய்துவிடலாம்.

எல்லா ஊர்களிலும் பள்ளிவாசல்கள் உள்ளன. இவை முன் வந்து சங்கங்களை அமைக்க வேண்டும். விடு வீடாக உண்டியல் கொடுத்து பணம் சேஉக்கலாம். தனவந்தஉகளை வசதி படைத்தோரை தொழில் புரிவோரை சந்தித்து சந்தா சேஉக்கலாம். இதன் மூலம் ஊருக்கு கல்விக்கு உதவலாம். இது புதிய விடயமல்ல. எமது நாட்டில் அநோகமான ஊஉகளில் இம்முறை உள்ளன. அவை வெற்றியுடன் செயற்படுகின்றன. நாமும் முயற்சிப்போம்.



# ஓட்டமாவடி, வாழைச்சேனையே மட்டு. முஸ்லிம்களுக்கு எதிர்காலத்தில் தஞ்சமளிக்கும் இடங்கள்!



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம்தொடர் – 12)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளின் நிருவாகத்தை மாவட்டச் செயலகம் வழங்காமல் தடுத்து வைத்திருப்பது கல்குடாத் தொகுதி முஸ்லிம்களின் பிரச்சினையாக மாத்திரம் பார்க்கக் கூடாது.

அது இந்த மாவட்டத்தில் வாழும் ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரச்சினையாகப் பார்க்கப்படவேண்டும் என்கிறார் நௌபர்.

பிரதேச காணி விவகாரங்களில் முஸ்லிம்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் முன்னிலை வகித்துச் செயற்படுபவர் வாழைச்சேனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ். நௌபர்.

தனது தலைமையிலான கல்குடா ஏறாவூர் காத்தான்குடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு இரண்டு தடவைகள் நாடாளுமன்றம் சென்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகளை நாடாளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்ததாக அவர் தெரிவிக்கிறார்.

பிரதேச செயலக நிருவாக அலகுக்குரிய, ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு வழங்கப்படாமல் இருப்பதே ஓட்டமாவடி, வாழைச்சேனை மத்தி பிரதேச செயலகங்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும்.

இட நெருக்கடி காரணமாக சுத்தமான குடிநீர் இல்லை, சுகாதாரமும் ஆரோக்கியமும் இல்லை, தொற்று நோய்கள் அதிகரிப்பு, சுற்றுச்சூழல் மாசுபாடு, குடியிருப்பதற்கு நிலம் இல்லை.

பொதுத் தேவைகளுக்கான காணிகள் இல்லாமையால் இளைஞர்களின் வலுவூட்டலுவுக்காக இந்த பிரதேச செயலாளர் பிரிவிலேயே ஒரு பொது மைதானம் அமைக்க முடியவில்லை, புதிய பாடசாலைகள் அமைக்க இடமில்லை, காத்தான்குடி, ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் அதே பிரச்சினைகளையே கல்குடா முஸ்லிம்களும் எதிர்நோக்குகின்றனர்.

காணிகள் இல்லாததால் பொதுச் சந்தை, பாடசாலை, விளையாட்டு மைதானம், வைத்தியசாலை, சன சமூக நிலையங்கள், கலாச்சார மண்டபம், மாடு அறுக்கும் தொழுவம், மையவாடி, பொழுதுபோக்குப் பூங்கா, தொழில் நிலையங்கள், தொழிற்சாலைகள், தொழிற்பயிற்சிக் கூடங்கள் என்று எதுவுமே அமைக்க முடியவில்லை. நீர் வடிந்தோடக் கூடிய வடிகான்களைக் கூட அமைக்க முடியவில்லை.

பொழுதுபோக்கு மையங்கள் ஏற்படுத்த இட வசதியின்மையால் இப்பிரதேச மக்கள் - குறிப்பாக இளந்தலைமுறையினர் உடல், உள ரீதியாக ஆரோக்கியமற்ற நிலையிலும் மன அழுத்தத்துடனும் காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

இதேவேளை கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் நிருவாக எல்லைகள் வரையறுக்கப்படாதது குறித்து அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் கல்குடாக் கிளை 2013.01.18 அன்று ஒரு கண்டனப் பேரணியை ஏற்பாடு செய்து அப்போது கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளராகவிருந்த எம்.சி. அன்சார் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எச்.எம்.எம். றுவைத் ஆகியோரிடம் மாவட்டச் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்காக ஒரு மகஜரைக் கையளித்திருந்தது.

அதில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலிருந்து பிரிக்கப்பட்டு கிரான் செயலகப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள 05 கிராம சேவகர் பிரிவுகளையும் மீண்டும் கோறளைப்பற்று மேற்கு - ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவோடு நிரந்தரமாக இணைக்க வேண்டும்.

வெறும் 4.0 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பினுள் 33000 இற்கும் மேற்பட்ட மக்கள் நெருங்கி வாழ்வதால் பல்வேறு நோய்களுக்கு உள்ளாவதுடன் பல அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றனர். அத்துடன், இங்குள்ள 90 சதவீதமான குடிநீர்க் கிணறுகள் மலசலகூட குழிகளை அண்மித்திருப்பதன் காரணமாக அவைகளை குடிநீருக்குப் பயன்படுத்துவது பொருத்தமற்றதாக அமைந்திருப்பது அண்மைய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் 2000ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்த போதிலும் இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல்மூலம் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதும், அதற்கென ஒரு பிரதேச சபை தாபிக்கப்படாமல் இருப்பதும் பெரும் குறையாக இருந்து வருகின்றது.

இதன்காரணமாக பிரதேச செயலகங்களினால் மேற்கொள்கின்ற அபிவிருத்தி மற்றும் நிருவாக விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதும், பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படக் கூடிய எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாமல் இருப்பதும், இப்பிரதேச மக்களுக்கு பாரிய அசௌகரியங்களை தோற்றுவித்து வருகின்றது” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம்கள் என்ற ஒரே ஒற்றைக் காரணத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் பல விடயங்களில் குறிப்பாக நிருவாக விடயங்களில் மாவட்ட நிருவாகத்தினால் பாரபட்சத்திற்கும் புறக்கணிப்பிற்கும் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்பது வரலாற்றுச் சான்றுகளோடு உள்ள விடயம் என்று வாதிடுகிறார் மூதறிஞர், எழுத்தாளர், மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம். ஹனீபா.

நாடறிந்த எழுத்தாளரும் சமாதான ஆர்வலருமான இவர் வடக்கு கிழக்கு இணைந்த முதலாவது மாகாண சபையின் உறுப்பினருமாவார். உலகத் தமிழ் எழுத்தாளர் குழாமோடு நட்புகளைக் கொண்டிருக்கும் இவர் முஸ்லிம்களுக்கு தமிழ்த் தரப்பினால் இழைக்கப்பட்ட அநீதிகளை பட்டவர்த்தனமாக எடுத்துச் சொல்பவர்.

பயங்கரவாதமென்பது ஒரு சமூகத்திற்கெதிராக அத்துமீறிய அடக்குமுறையை ஏதாவதொரு அடிப்படையில் பயன்படுத்துவதேயாகும். அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் எல்ரீரீஈ இயக்கத்தினரால் ஆயுதமுனையில் பயங்கரவாதம் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

அரசாங்கத்தினால் ஆயுதப் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நிலையில் இப்பொழுது முஸ்லிம் சமூகத்தின் மீது மாவட்ட அதிகார மட்டத்தினால் ஆதிக்கம் பிரயோகிக்கப்பட்டு பல்வேறுபட்ட வழிமுறைகளிலும் முஸ்லிம் மக்களுக்கு பலவிதமான அநீதிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிகழ்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றது.

இதற்குச் சான்றாக பல உதாரணங்களை முன்வைக்க முடியும் என்று கூறும் ஹனீபா,

இந்த மாவட்டத்தில் கடந்த 34 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய பல கிராமங்கள் உள்ளன.

ஆனால், வெளியேற்றப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்தினால் இதுவரை எந்தவொரு மீள் குடியேற்றமும் இடம்பெறவில்லை. முடிந்தால் மாவட்ட செயலகம் முஸ்லிம் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட ஒரு ஆவணத்தையாவது காட்ட முடியுமா? என்று கேள்வி எழுப்புகிறார்.

இது அரச அதிகாரத்தை முஸ்லிம் சமூகத்துக்கெதிராக பயன்படுத்தும் நிருவாகப் பயங்கரவாதமாகப் பார்க்கப்பட வேண்டியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்களது காணிகளுக்கான உரிமங்களைக்கோரி விண்ணப்பித்திருந்த பல ஆயிரம் முஸ்லிம்களுக்கு இதுவரை காணிகளுக்கான ஆவணங்கள் வழங்கப்படாமல் மாவட்ட நிருவாகம் இன ரீதியாகப் புறக்கணித்து வருவதை அதிகாரிகளால் மறுக்க முடியுமா? என்றும் அவர் வினவுகிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் 10 பிரதேச செயலகங்களும் முஸ்லிம்களைக் கொண்ட 4 பிரதேச செயலகங்களும் உள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் 4 பிரதேச செயலகங்களில் 2 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களாக தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகளே கடமையாற்றும் நிலையில் மூன்றாவது பிரதேச செயலகத்திற்கு தமிழ் அதிகாரியொருவரை நியமிக்க முயற்சி செய்யப்படுகிறது.

அத்தோடு, மற்றைய பதவி நிலைகளிலும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தோரே காணப்படுகின்றார்கள்.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு தமிழ்ப் பிரதேச செயலகத்திலேனும் ஒரு முஸ்லிம் அதிகாரியாவது பிரதேச செயலாளராக அல்லது உதவிப் பிரதேச செயலாளராக அல்லது நிருவாக உத்தியோகத்தராக கடமை புரிய அனுமதிக்கப்படவில்லை.? தமிழ் அரசியல்வாதிகளினதும் உயரதிகாரிகளின் இந்த மனநிலையை என்னவென்று சொல்வது? என்று எஸ்எல்.எம். ஹனீபா மேலும் கேள்வி எழுப்புகிறார்.

அத்தோடு, நிருவாக அதிகாரிகளாக இருந்த பல முஸ்லிம்கள் எல்ரீரீஈ இயக்கத்தினரால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதையும் அவர் நினைவூட்டுகிறார்.

1992.12.26 அன்று மட்டக்களப்பு மியான்குளம் சந்தியில் நிகழ்த்தப்பட்ட கண்ணிவெடி மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் ஓட்டமாவடியைச் சேர்ந்த 4 முஸ்லிம் அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். விறகு வியாபாரியான சாகுல் ஹமீட் என்பவரும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

வை. அஹமது, இவர் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரி. மட்டக்களப்பு மேலதிக அரச அதிபராகவும் கடமை புரிந்தவர். மர்ஹூம் அஹமது படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் இன்றுவரை மாவட்டத்தில் முஸ்லிம் ஒருவர் மேலதிக அரசாங்க அதிபராக வருவது தடுக்கப்பட்டே வந்துள்ளது.

ஏ.கே. உதுமான் இவர் ஓட்டமாவடி உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றியவர். மேலும் சட்டத்தரணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஏ.பி.எம். முஹைதீன், அத்துடன் சாதுலிய்யா கல்லூரியின் முதலாவது அதிபர் எஸ்.ஏ.எஸ். மஹ்மூது ஆகிய கல்வியாளர்களை கல்குடா சமூகம் இழந்தது.

இதைவிட முறையாக நியமனம் பெற்ற பல முஸ்லிம் அதிகாரிகள் மாவட்ட செயலக இனவாத அதிகாரிகளால் திட்டமிட்டு பலவந்தமாக இடமாற்றம் செய்யப்பட்டார்கள்” என்கிறார் மூதறிஞர் எஸ்.எல்.எம். ஹனீபா.

**(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் – தொடர் அடுத்த வாரம்)**

# பிறை விழிப்புணர்வு மாநாடு









(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பிறை விழிப்புணர்வு தொடர்பான ஒருநாள் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று (03) நடைபெற்றது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் அதன் பிறைக்குழு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தலைவர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.பி.எம்.ஹிஷாம் பத்தாஹி மற்றும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது. மாதாந்த பிறை பார்த்தலில் கடைப்பிடிக்கப்படுகின்ற வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வை வழங்கும் நோக்கில் உலமாக்கள், வானியல்துறை மற்றும் துறைசார் நிபுணர்கள் விளக்கமளித்தனர்.

கொழும்பு பெரியவாசல் தலைவர் தாஹிர் ரஸீன், கொழும்பு பெரியபள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.ஹிஷாம், உப தலைவர் அப்துல் நாஸர், பிறை தீர்மானத்தில் வளிமண்டலத்தின் தாக்கம் எனும் தலைப்பில் வளிமண்டலத்திணைக்கள அதிகாரி ஏ.எம்.எம்.ஸாலிஹீன், பிறை தீர்மானத்தில் வானியலின் வகிபாகம் எனும் தலைப்பில் மௌலவி அப்துல் ரஹ்மான் ஆகியோர் உரையாற்றியதுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சார்பாக திணைக்களத்தின் வக்பு பிரிவின் அதிகாரி ஏ.எஸ்.எம்.ஜாவித் ஆகியோர்கள் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் துறைசார்முக்கியஸ்தர்கள் என சுமார் 200 பேருக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# மர்ஹூம் வை.எல்.எஸ். ஹமீட் அவர்களின் "வாழ்வும் பணியும்" நினைவேந்தல் நிகழ்வு




அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபகச் செயலாளர் மர்ஹூம் வை.எல்.எஸ். ஹமீட் அவர்களின் "வாழ்வும் பணியும்" நினைவேந்தல் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை (27) கல்முனை, ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டு விஷேட உரை நிகழ்த்தியதுடன், முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நினைவுரை ஆற்றியிருந்தார்.

மேலும், மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் M.S.S. அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி N.M. ஷஹீட், தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப், செயலாளர் நாயகம் S .சுபைர்தீன், பிரதித் தலைவர் M.S. அனீஸ், தேசிய கொள்கைபரப்புச் செயலாளர் K.M.A. றஸாக் (ஜவாத்), பிரதித் தவிசாளர் M.I. முத்து முஹம்மட், பிரதி செயலாளர் நாயகம் ஆ.யு. அன்சில், பிரதி தேசிய அமைப்பாளர் M.A.M. தாஹிர், சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் I.L.M. மாஹிர் உள்ளிட்ட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட புத்திஜீவிகள், கட்சியின் முக்கியஸ்தர்கள், வை.எல்.எஸ். ஹமீடின் குடும்பத்தினர் மற்றும் கட்சியின் ஆதவாளர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

## நானா நீயா அவனா ?



சபீர் மொஹமட்

# சட்டங்கள் மீறப்படும் !!

1981 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு பின் 1983ஆம் ஆண்டு வெலிகட சிறைச்சாலை படுகொலையில் கொல்லப்பட்ட "குட்டிமணி" கொல்லப்படுவதற்கு முன்னர் இவ்வாறு கூறியிருந்தார்.

"அடுத்த மனிதனின் சுதந்திரம் பற்றி கரிசனை கொள்ளாத மனிதன் தனது சுதந்திரத்தையும் குழி தோண்டி புதைத்து விடுவான். பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பது தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்ற ஒழுக்கம் கெட்ட ஒரு சட்டம். எமக்கு நிகழ்ந்தது போல் இலங்கை வாழ் ஏனையவர்களுக்கும் மிக விரைவில் இந்த நிலைமை ஏற்படும். இந்த சட்டத்துடன் நான் சிங்கள மக்களை மிகவும் அனுதாபத்துடனே இப்போது பார்க்கின்றேன். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், எப்போதாவது வடக்கிற்கு மட்டும் என்றிருந்த இந்த சட்டம் தெற்கையும் தாக்கும். ஆணையிரவு வதைமுகாம் ஹம்பாந்தோட்டைக்கு எடுத்துச் செல்லப்படும். குருநகர் வதைமுகாம் குருநாகலைக்கு எடுத்துச் செல்லப்படும். இன்று தமிழ் இளைஞர்கள் போல் அன்றைக்கு சிங்கள இளைஞர்கள் அவற்றில் வதைக்கப்படுவார்கள். ஆகவே இன்றிலிருந்தாவது இந்த சட்ட விரோதமான சட்டத்திற்கு எதிராக எழுந்து நில்லுங்கள்!! "

சட்டங்கள் இருப்பது மக்களை பாதுகாப்பதற்கு. சட்டங்கள் இயற்றப்படுவது காலத்தின் தேவைக்கு. ஆனால் இலங்கையில் சட்டங்கள் இருப்பது ஆட்சியாளர்களை பாதுகாப்பதற்கு, புதிய சட்டங்கள் இயற்றப்படுவது ஆட்சியாளர்களின் தேவைக்கு. இன்றளவில் இது இலங்கையில் ஒரு பிரசித்தி பெற்ற இரகசியமாக உள்ளது.

மக்களின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த வாரம், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் (OSB) பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. இலங்கை வரலாற்றிலேயே அதிகமான மனுதாரர்களால் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட சட்டமாக இது பதியப்பட்டுள்ளது. ஒரு சட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டால் அதனை நிறைவேற்றுவதற்கு முன்னர் எந்தவொரு இலங்கை வாழ் குடிமகனுக்கும் உயர் நீதிமன்றத்தில் குறித்த சட்டம் இலங்கை அடிப்படை சட்டமான அரசியலமைப்புக்கு அமைவான தன்மையை சவாலுக்கு உட்படுத்தலாம். அவ்வாறு 51 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதன் பின்னர் அவற்றை ஆராய்ந்து உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு திருத்தங்களை பரிந்துரை செய்தது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அந்த சட்டம் ஆபத்தானது. இருந்த போதிலும் சுயநலமிக்க சந்தர்ப்பவாத பெரும்பான்மை ஆட்சியாளர்கள் இதற்கு ஆதரவாக தமது கைகளை உயர்த்தினர். பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்த சட்டம் அமலுக்கு வந்தது.

அதேபோல் இன்னும் ஒரு சட்டம் இப்போது நீதிமன்றத்தில். அதுதான் (ATA) பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம். இந்த சட்டமூலத்திற்கு எதிராகவும் 31 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஐந்து நாட்கள் தொடர்ந்து மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. நான்காவது நாள் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது, சட்டத்தரணி ஒருவர் தனது வாதத்தை "இஞ்சி கொடுத்து மிளகு வாங்கியது போல்" என்ற பழமொழியுடனே ஆரம்பித்தார்.

இந்த சட்டத்தின் பாரதூரத்தை சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கையில், சாதாரண ஒரு குடிமகனை 'சந்தேக நபர்' என கரையோர பாதுகாப்பு அதிகாரி ஒருவரால் கூட கைது செய்ய முடியும். அதற்கான அதிகாரம் இந்த சட்டத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் இதுவரை காலமும் நீதேவான் நீதிமன்றத்திற்கு இருந்த ஒரு சில அதிகாரங்கள் பாதுகாப்பு செயலாளருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பயங்கரவாதம் என்ற பதம் மிகவும் விரிவாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உங்களை கைது செய்ய வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருந்தால் எப்படி வேண்டுமானாலும் உங்களைப் "பயங்கரவாதி" என காட்டி கைது செய்யலாம். சுருக்கமாக கூறுவதாயின் பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு (PTA) மாற்றிடாக கொண்டு வருவதாக கூறுகின்ற இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் (ATA), PTA யை விட பல மடங்கு ஆபத்தானது.

ஒருபுறம் மக்களின் கருத்து சுதந்திரத்தை ஒடுக்கி வாயை மூடும் சட்டங்கள், மறுபுறம் வாழும் சுதந்திரத்தை நசுக்கி மக்களை முடக்கும் சட்டங்கள். ஏற்கனவே கூறியது போல் சட்டங்கள் என்பது மக்களை பாதுகாக்க வேண்டிய ஒரு பொறிமுறை. ஆனால் இலங்கையில் சட்டங்கள் அவ்வாறு அல்ல. ீவுயு மற்றும் ஐஊஊீசு போன்ற சட்டங்கள் யாருக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சிந்தியுங்கள்! ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, அஹ்னாப் ஜசீம், ரம்சி ராசிக் முதல் வசந்த முதலிகே வரை இந்த சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள். எத்தனை கோடி நஷ்ட ஈடு கொடுத்தாலும் தான் இழந்த வாழ்க்கையையும் தனது அபிமானத்தையும் எவராலும் மீட்டு தர முடியாது.

1979 ஆம் ஆண்டு ஒரு தற்காலிக சட்டமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் இன்று தெற்கிலே வாழ்கின்ற சிங்கள முஸ்லிம் மக்களுக்கு எதிராக திரும்பி உள்ளது. அன்று மௌனமாக இருந்தவர்கள் இன்று தடுமாறுகின்றார்கள். அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவிற்கு எதிராக PTA செயல்படுத்தப்படும் வரை தெற்கிலே இருந்த அனேகமான சிங்களவர்கள் மௌனமாகவே இருந்தார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து எழுத்தாளர் அஹ்நாபும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவும் கைது செய்யப்படும் வரை பெரும்பான்மையான முஸ்லிம்களுக்குீவுயு பிரச்சனையாகவே இருக்கவில்லை.

ஐந்து நாட்களாக முன்வைக்கப்பட்ட மனுக்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவும் ஒருவர். இறுதியாக முன்வைக்கப்பட்ட மனு ஹிஜாஸ/டையது. ஹிஜாஸ் ஆஜராகி இருந்தது, PTA எனப்படுகின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட ஆறு நிரபராதி குடிமக்களின் மனுதாரராக ஆகும். இந்த ஒரு சம்பவம் போதும், இலங்கை வாழ் ஒட்டுமொத்த மக்களினதும் நெற்றிக்கண்ணை திறப்பதற்கு இந்த ஒரு சம்பவம் போதுமானது.

துரதிஷ்டம் என்னவென்றால் இன்னும் சாதாரண பொதுமக்கள் இதன் ஆபத்தை அறியாதவர்களாக உள்ளார்கள். ஒருபுறம் தேர்தல் வருடமாக இது உள்ளது. மறுபுறம் திரும்பவும் பொருளாதார நெருக்கடியை நோக்கி நாங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். பொருட்கள் சந்தையில் இருந்தாலும் அத்தியாவசிய பொருட்கள் இன்று ஆடம்பர பொருட்களாக மாறியுள்ளது. உண்ண உணவிருந்தும் வாங்க பணமில்லாத நிலைமை மக்களுக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அவ்வாறு இருக்கையில் நிச்சயமாக மீண்டும் ஒருமுறை மக்கள் வீதிகளுக்கு இறங்குவார்கள் என்ற அச்சம் ஆட்சியாளர்களுக்கு உள்ளது. ஆகவே நீங்கள் வேண்டும், எதற்காக இவ்வளவு பதற்றத்துடன் இத்தனை புதிய சட்டங்கள் என்று ?

வெள்ளம் வந்தபின் அணை கட்டுவதில் பயனில்லை. ஆனால் அணை தாண்டிய வெள்ளத்தில் எதிர்நீச்சல் அடிக்கலாம். அது ஆபத்தாக இருந்தாலும் எமக்கு வேறு வழி இல்லாவிட்டால் அது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கடமையாகிவிடும். உரிமைகள் என்பது மிக இலகுவில் கிடைப்பவை அல்ல. வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி போராடி பெற்றுக்கொண்ட உரிமைகளை இலகுவில் கைவிட்டு விடும் அளவிற்கு முட்டாள்களாக இருக்க வேண்டாம் !!

# இரண்டாம் மொழி சித்தி அடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(எம்.பஹத் ஜுனைட்)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி சித்தி அடைந்தவர்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (02) ஆரையம்பதி நந்தகோபால் மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மட்டக்களப்பு மத்தி வலயத்தின் இணைப்பாளர் ஏ.எல்.எம்.றிஸ்வி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி பஸ்மிலா ரவிராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் இணைப்பாளர் திருமதி கல்யாணி தங்கராஜ் , பயிற்றுவிப்பாளர் டபிள்யூ. கல்யாணி ,ஆரையம்பதி நகர சபை செயலாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் கௌரவ அதிதிகலாக கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் இரண்டாம் மொழி பயிற்சியில் சித்தி அடைந்த சுமார் 41 அரச உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 76 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம்

# முன்னோக்கிய பார்வை!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



இலங்கைத் அந்நிய ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்று 2024 பெப்ரவரி 04 ஆம் திகதியுடன் 76 வருடங்கள் நிறைவடைகின்றது. இவ்வருடம் நாம் 76 ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூறுகின்றோம். 2022 ஏப்ரில் மாதம் ஏற்பட்ட அரசியல் தலைமைத்துவ மாற்றத்தின் கீழான ரனில் விக்கிரமசிங்காவின் ஆட்சியில் அவரின் இரண்டாவது பதவிக்காலத்தில் இந்த சுதந்திர தின நிகழ்வு நினைவு கூறப்படுகின்றது. சுதந்திரம் என்றால் என்ன? நாம் வருடாந்தம் இந்த சுதந்திர தினத்தை நிறைவுகூறுவதன் அர்த்தம் என்ன? பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் சுதந்திரமான ஒரு நாட்டில் மக்களுக்காக ஆற்ற வேண்டிய தேவைகள் யாவை? அரசாங்கத்தால் அந்நத பொறுப்புக்கள் மீறப்படும் போது மக்களால் என்ன செய்ய முடியும் போன்ற விடயங்கள் சுதந்திரம் பற்றி பேசுகின்ற போது சிந்திக்க வேண்டிய விடயங்களாக அமைகின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்து 76 வருடங்களாக இருந்தாலும் அந்த சுதந்திரத்திற்கென்று ஒரு தனித்துவமான வரலாற்று பின்னணி இருந்து வருகின்றது. கரையோர பிரதேசங்களை 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கும் வரையில் இந்நாடு பல சுதேச மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. இதன் அடையாளமே ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் வெவ்வேறு இராசதானிகள் இருந்துள்ளதை நாம் இலங்கையின் வரலாற்றை புரட்டுவதன் மூலம் அறிகின்றோம். 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் அதுவரையில் நிர்வாகம் செய்து கொண்டிருந்த போர்த்துக்கேயரை விரட்டியடித்துவிட்டு இலங்கையின் கரையோர பிரதேசங்களை கைப்பற்றி ஆட்சி செய்தனர். 1796 ஆம் ஆண்டு இலங்கையை கைப்பற்றிய ஆங்கிலேயர் ஒல்லாந்தரை விரட்டி அடித்துவிட்டு முதலில் கரையோரப் பிரதேசங்கைள கைப்பற்றி நிர்வாகம் செய்தனர். பின்னர் 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியை கைப்பற்றியதன் மூலம் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தனர். இவ்வாறாக மூன்று ஐரோப்பியரதும் ஆதிகதக்தின் கீழ் இலங்கையில் பல அரசியல், நிர்வாக, சமூக மற்றும் கலாசார ரீதியான மாற்றங்கள் தாக்கங்களும் ஏற்படலாயிற்று. இலங்கை சுதந்திர தேசமாக பரிணமித்திருந்தாலும் இன்றும் இந்நாட்டவர்கள் இந்த ஐரோப்பிய ஆதிக்கத்தின் வாடையை நுகர்ந்தவர்களாக இருக்கின்றனர். இருக்கின்றனர்.

இவ்வாறு இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியரிடம் இருந்து இலங்கைத் தேசம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெறுக்கொண்டதாயினும் 1972 ஆம் ஆண்டு வரையில் இந்நாட்டை ஆட்சிய செய்வதற்கான அரசியல் யாப்பொன்றை வரைந்து கெள்ள முடியாத நிலை இருந்து வந்தது. அதுவரையில் டொமினியன் அந்தஸ்துடனான சுதந்திரத்தையே இந்நாடு அனுபவித்து வந்தது. 1970 ஆம் ஆண்டு ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான கூட்டணி தேர்தலில் பெற்றுக்கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தால் பிரித்தானியரது நிர்வாகத்தை முற்றாக ஒழித்துக் கட்டி 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பொன்றை வரைந்து கொண்டதன் மூலம் முதலாவது குடியரசாக இலங்கைத் தேசம் மலர்ந்தது. 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு அறிமுகம் செய்யப்பட்டதோடு இலங்கையை இலங்கையராலே முழுமையாக ஆட்சி செய்யும் நிலை உருவாகியது. 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பிரதி பலனாக 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு வரையப்பட்டு 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பை முற்றாக மாற்றம் செய்து இரண்டாவது குடியரசு நாப்பு நடைமுறைக்கு வந்தது.

அதனைத் தொடர்ந்து தற்போது மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டு வரையில் இரண்டாவது குடியரசு யாப்பிற்கு 21 திருத்தங்கள் வரையில் முன்வைக்கப்பட்டு காலத்திற்கு காலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்பவும் அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட் அரசியல் மாற்றத்தின் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் இரண்டாவது குடியரசு யாப்பை திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்த போது அந்த முயற்சி வெற்றியளி க்கவில்லை. ராஜபக்ஷ யுகம் இடைநடுவில் சீர்குலைந்ததால் தற்போதைய ஜனாதிபதியாக இருந்து வரும் ரனிலின் நிர்வாகத்தின் கீழும் இந்த அரசியல் யாப்பு திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற ஆர்வம் வெளிப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அதற்கான கால சூழ்நிலை தற்போதைக்கு இல்லை. காரணம் இந்த வருடம் மே அல்லது ஜூன் மாத காலப்பகுதிக்குள் அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

சுதந்திரத்திற்கு முன்னைய அரசியல் வரலாற்றை சற்று பின்னோக்கி பார்த்தால் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த 150 வருடங்களுக்குள் 1833 ஆம் ஆண்டு கோல் புரூக், 1910 ஆம் ஆண்டு மற்றும் 1920 ஆம் ஆண்டுகளில் முதலாவது, இரண்டாவது மெனிங் சீர்திருத்தங்கள், 1924 ஆம் ஆண்டு குரூ மக்களம், 1931 ஆம் ஆண்டு டொனமூர், 1947 ஆம் ஆண்டு சோல்பரி என்ற அடிப்படையில் அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களை இலங்கைக்கு முன்வைத்து நிர்வாகத்தை முன்னெடுத்து வந்திருக்கின்றது. இவ்வாறாக இலங்கை சுமார் 450 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து விடுதலை பெற்ற நாளாக 1948 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் பதிவு செய்யப் பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு அந்நிய ஏகாதிபத்திய வாதிகளிடம் இருந்து சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தூர நோக்கில் இந்நாட்டில் வாழ்ந்த சிங்கள தலைவர்களோடு இணைந்து தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தோளோடு தோள் நின்று அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்தனர். இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக போராடும் இலங்கை தேசிய காங்கிரஸ் 1919 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த தேசிய காங்கிரசின் நிறைவேற்று குழு உறுப்பினர்களாக முஸ்லிம் பிரதிநிதிகள் என்ற வகையில் காசிம் உமர், மக்தான் இஸ்மாயீல், எஸ்.என். இஸ்மாயீல், டி.பி. ஜாயா, எல்.எம். சபர், எம்.கே. சால்தீன் ஆகியோர் 1922 ஆம் ஆண்டு இணைந்து கொண்டனர். அதன் மூலம் சுதந்திரப் போராட்டத்திற்கான இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு ஆரம்பமாகியது. அன்றை காலகட்டத்தில் இந்த முஸ்லிம் தலைவர்கள் மிகவும் பிரபல்யம் மிக்க தலைவர்களாக கருதப்பட்டவர்களாவர். 1925 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் திகதி இந்த தேசிய காங்கிரசின் உதவித் தலைவராக டி.பி.ஜாயா தெரிவு செய்யப்பட்டார். ரியால் முஹம்மத் என்ற முஸ்லிம் தலைவர் இலங்கை தேசிய காங்கிரசின் செயலாளர்களுள் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டார். 1924 ஆம் ஆண்டு மனிங் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை ஆட்சேபித்தபோது முஸ்லிம் தலைவர்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்கினர்.

1927 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு இலங்கை வந்தபோது இலங்கைக்காக மற்றுமொரு அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கான கருத்துக்களை வழங்கியவர்களில் என். எச்.அப்துல் காதர், சேர் மாகான் மாகர், டி.பி ஜாயா ஆகியோர் இடம்பெற்றனர். அதனைத் தொடர்ந்து இலங்கை தேசிய காங்கிரசால் 1930 ஜனவரி 23 ஆம் திகதி இங்கிலாந்திற்கு மகாராணியை சந்தித்து இலங்கையின் நிலவரம் மற்றும் விடுதலை தொடர்பாக கலந்துரை யாடுவதற்காக அனுப்பப்பட்ட தூ துக்குழுவில் காசிம் இஸ்மாயில் என்பவரும் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். அன்றைய காலகட்டத்தில் சுதந்திர வேட்கையில் பாடுபட்ட ஏ.ஈ.குனசிங்கா, டபிள்யு.ஏ.டி.சில்வா, டி.எஸ்.சேனாநாயக்கா, எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாநாயக்கா, சி.டபிள். டபிள்யு. கன்னங்கர, பொன்னம்பல இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சேர் அருனாசலம், டி.பி. ஜயதிலக, போன்ற சிங்கள பௌத்த மற்றும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களுடன் இணைந்து முஸ்லிம் தலைவர்களும் இந்நாட்டின் முஸ்லிம் சமூகம் சார்பான ஆதரவையும் ஒத்துழைப்பையும் சுதந்திரத்திற்காக வழங்கினர்.

அதே நேரம் தமிழ் சமூகம் சார்ந்த தலைவர்களான இராமநாதன் மற்றும் ஜீ.ஜீ பொன்னம்பல் போன்றவர்கள் அவர்களது சமூகம் சார்பாக சுயாதிபத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட முக்கியமான உரிமைக் கோரிக்கையையும் அன்றைய காலகட்டத்திலே முன்வைத்தே விடுதலைக்காகன ஆதரவை வழங்கினர். ஆனாலும் முஸ்லிம் தலைவர்களைப் பொறுத்த வரையில் எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி இந்நாட்டில் விடுதலை, சுயாதிபத்தியம், இறைமை, தன்னாதிக்கம், ஐக்கியம், சமாதானம் என்ற ஒரே குறிக்கோளில் ஒத்துழைப்பை வழங்கினர் என்பது பிரதானமாகும். அத்துடன் தேசிய காங்கிரசுக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அகில இலங்கை முஸ்லிம் லீக், இலங்கை முஸ்லிம் சங்கம், இலங்கை சோனகர் சங்கம் (சிலோன் முவர்ஸ் அசோசியேசன்) போன்ற சங்கங்களை உருவாக்கி அவற்றின் ஊடாக முஸ்லிம்களை ஒருங்கிணைத்து பிரித்தானியர் ஆதிக்கத்தில் இருந்து இலங்கையை சுதந்திரம் அடையச் செய்து நாட்டின் இறைமை தன்னாதிக்கம் என்பவற்றை உறுதிப்படுத்த பங்களிப்பை வழங்கியுள்ளனர். இந்த பங்களிப்பின் காரணமாகவே 1833 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டு வரையிலான அரசாங்க சபையில் பல முஸ்லிம்கள் அங்கம் வகித்து நாட்டிற்காகவும் முஸ்லிம்களுக்காகவும் குரல் எழுப்பியதை குறிப்பிடலாம்.

அவர்களுள் எம்.சி.அப்துர்ரஹ்மான், வாபிச்சி மரிக்கார், என்.எச்.எம். அப்துல் காதர், முஹம்மத் சுல்தான், எம்.ரி. அக்பர், டி.பி.ஜாயா, மாகான் மாகர், எம்.சீ.எம். கலீல், சேர் ராசிக் பரீட் போன்றவர்களைக் குறிப்பிடலாம். 1833 ஆம் ஆண்டில் இருந்து 1931 ஆம் ஆண்டு வரையில் பிரித்தானியரால் முன்வைக்கப்பட்ட ஆறு அரசியல் சீர்திருத்தங்களின் கீழும் நிறுவப்பட்ட அரசாங்க சபையில் நியமன மற்றும் தெரிவு அங்கத்தவர்களாக இருந்து இலங்கையின் இறைமைக்காக குரல் எழுப்பினர்.

1947 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் பதவிக்கு வந்த இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் கீழும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஐக்கிய இலங்கை என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் அரசியல் பங்களிப்பை செய்து வருகின்றனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிளவுபட்ட தேசத்தை அல்லது ஐக்கியம் சீர்குழைந்த தேசத்தை முஸ்லிம்கள் விரும்பியதில்லை. அவ்வாறே தமிழர்கள் மத்தியில் இருந்தும் முழுமையான ஒத்தழைப்பு வழங்கப்பட்ட அதே நேரம் 1948 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலம் முதல் இன்று வரையில் தமிழர்களது உரிமைகள் தொடர்பாக வலுவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதோடு அதற்கான போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்து ஒருவாறு அதில் இருந்து மீள முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது. அதில் சர்வதேச நாணய நிதியத்தின் 08 வருட கால நிபந்தனையின் நான்கு கட்ட அடிப்படையிலான 100,000 கோடி ரூபா (290 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) கடன் உதவி பிரதான இடத்தை வகிக்கின்றது. இவ்வாறான ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணம் திட்டமிடப்படாத பொருளாதார முகாமைத்துவம், தந்திரோபாயங்கள், அரசியல் செல்வாக்கில் உயர் பதவிகளில் அமரும் அதிகாரிகளது அசமந்த போக்கு ஆளும் வர்க்கத்தில் குறிப்பிட்ட ஒரு தரப்பினரினால் முன்னெடுக்கப்பட்ட ஊழல், மோசடிகள், சூரையாடல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள்என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆரசியல் சுதந்திரம் என்பது மக்கள் நாட்டில் பிறப்பாலும் அரசியல் அமைப்பாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள், சலுகைகள், கடமைகளை பூரணமாக அனுபவிப்பதற்காக பெறுகின்ற உரிமையாகும். பேச்சு, எழுத்து, கருத்துக்களை வெளிப்படுத்தம், கூட்டம் கூடும், தாம் விரும்பும் அரசியல் சிந்தனையை பின்பற்றல், உட்பட பலவிதமான உரிமைகளை உள்ளடக்கிய செயற்பாடுகள் அமைகின்றன. இந்த நடத்தை கட்டுப்படுத்தப்படும் போது அல்லது சட்டங்கள் மூலம் அடக்கி ஒடுக்கப்படும் போது சுதந்திரமான அரசியல் சுதந்திரம் முடக்கப்படுகின்றது. அதே போன்று பொருளாதார ரீதியாக மக்கள் பூரணமான முறையில் நாட்டில் எந்த இடத்திலும், தாம் விரும்பும் வர்த்தக வாணிப பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அதற்கான வசதிகளை வழங்கி கட்டுப்பாடுகளை தளர்த்தி அனைத்து இன மக்களுக்கும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குதல் பொருளாதார சுதந்திரமாக அமைகின்றது.

அவ்வாறே அரசியல் அமைப்பின் பிரிவு 10 மற்றும் 14 இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மத சுதந்திரத்தை முழுமையாக அனுபவித்தல் உட்பட அதனோடிணைந்த வசதிகள் அமைகின்றன. இத்தகைய சுதந்திரங்களுக்கு அரசு, ஆட்சியாளர்கள் தடையாக அமையும் போது நாட்டில் அமைதியின்மைகள் ஏற்படுகின்றன. ஒன்றுமை, சகவாழ்வு சீர்குழைந்து அரசியல், பொருளாதார மற்றும் மத ரீதியான ஸ்தீரமின்மை உருவாகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் இலங்கை சுதந்திர தேசம் என்று கூறிக்கொள்வதற்கு அருகதையற்றதாக மாறுகின்றது. இத்தகைய நிலைமைகள் நாட்டில் ஏற்படக் கூடாது. ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக ஆட்சியாளர்கள் சட்டங்களை கொண்டு வந்து மக்களை அடக்கி ஒடுக்க முயற்சிகள் எடுப்பதாக இருந்தால் அதற்குப் பெயர் சுதந்திரம் அல்ல. அத்தகைய ஒரு சூழ்நிலையில் சுதந்திரம் பற்றி பேசுவதால் எந்தவிதமான பயனும் கிடைக்காது. அதனால்தான் பல்லினங்களைக் கொண்ட இந்த தேசத்தில் அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் மற்றும் மத சுதந்திரம் ஆகியன 1948 ஆம் ஆண்டு எல்லா இனங்களும் ஒன்றாக இணைந்து பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை பலப்படுத்துவதற்கான ஆணி வேராக கருத முடிகின்றது. அதுவே அரசியல் ஸ்தீர நிலைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான மூலோபாயங்களாகும்.




நாச்சியாதீவு பர்வீன்

# ஒரு ராணியாட்டம் இருப்பாள் அம்மா...

அன்பிற்கினிய எவரும் இறந்து போகையில்,
மனசு நிரம்பவே கனத்துப்போய் விடுகிறது.

மானுடர்கள் அழுவதில்லை,
அவர்கள் ஆழ மௌனிக்கிறார்கள்.
விதவையாய் இருக்க
அம்மா விரும்பவில்லை.

சுமங்கலியாய் அவள் சென்றுவிட
அப்பாவுக்கும் விருப்பம் இல்லை.
அம்மா இல்லாத வீட்டை மகளாய் நானும்
என்றும் பார்க்க விரும்பினேன் இல்லை.

பனங்கற்கண்டு, ஏலவாசனை,
குங்குமப்பூ என் அம்மா எனக்கு.
அன்பை
இவ்வண்ணமாய் அள்ளியெடுத்துக்கொண்டு
இவர்கள் யாபேரும் எங்கிருந்து வந்தார்கள்?
எல்லோரும் எவரெவர்க் குழுவில்
அங்கத்துவம் பெற்றிருந்தார்கள்?

எல்லோரும் எவ்வெப் பிரதேசத்தில்
வாழ்ந்திருந்தார்கள்?
என்னுள் வாழ்ந்த
என் குழந்தைமையின் இழப்பு பாரியது.

நான் மௌனமாய் அழுகிறேன்,
தொலைந்த என் தேவதைக் குழந்தைக்காக.
ஐயோ, நான் நிறைய அழுகிறேன்.
ஒரு தனி நாளில், வெகுவாய்த்
தனித்தே இருக்கப் போகிற ஒரு நாளில் எங்கே
நான் கொண்டு செல்லப்படுவேன்?
எவரெவர் வந்து அழக்கூடும்?

எப்போதும் எவரையோ
ஆழமாய்த் தொலைத்த வாழ்வு
எல்லோருக்கும் இருந்தது.
என்றும் முடிவற்று நீளும் தெருவோடு
விரைவாய் அவர்கள் சென்று விட்டார்கள்.

உன் கைகளில் வைப்பேன் கடவுளே,
என் கவலைகளை,
கவனங்களை, பிரச்சினைகளை.
உன் ஞானத்தின் மீது வைப்பேன்,
என் பாதையை, திசையை, இலக்கை.

உன் நேசத்தில் வைப்பேன்
என் முழு ஜீவிதத்தையும்..
அப்பா, கூட்டிப்போய் ஒரு சுற்று சுற்றி விட்டு
எங்கே எடுத்துக் கொண்டு போயினாய்
உன் சைக்கிளை நீ ?

என்ன சொல்ல?
இனியொன்றும் இல்லை.
அழைத்துச்செல்லப் பட்டிருக்கிற
எந்த ராஜ்ஜியத்துக்குள்ளும்,
என் அம்மா ஒரு ராணியாட்டம் இருப்பாள்.

கெக்கிராவ ஸுலைஹா






# பிரகடனம்

'வற்'(vat)றின்
வருகையினால்
செலவுப் பாசறையில்
தொடங்கி விட்டது
வெட்டுக்குத்து.

இருநூருக்குள் இருந்த
மரக்கறி விலையெலாம்
இன்று
ஆயிரமிரண்டாயிரமாய்
எகிறிச் சிரிக்க
அழுகிறோம் நாங்கள்.
சம்பளப் பணத்தில்
ஒன்றுக்குப் பத்தாய்
கொடுக்க
கடவுளா நாங்கள்?

எங்கே போவோம்?
வழியில்லை – ஆனால்
விதியொன்று தேவை.

இனி
வெண்சோற்றையும்
தேங்காய்ச் சம்பலையும்
நாளாந்த உணவாய்
நமக்கு நாமே
பிரகடனம் செய்வோம்.

–எம். ஏ. ரஹீமா

# ஒரு வாசகியின் வாக்குமூலம்



நான் அடிக்கடி விழிகளைத் துடைத்துக் கொண்டிருந்தேன். அந்த ஈரத்தின் காரணம் எனக்குத் தெரியும்.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் மூன்று எனச் சிறுவயதில் ஆசிரியர்கள் சொல்லித் தந்தார்கள். எங்களுக்கு நான்காவது ஒன்றும் இருந்தது. (இந்தத் தலைமுறைக்கு ஐந்தாவது, ஆறாவதெல்லாம் இருக்கும்) அது தான் வானொலி. அதன் பாலருந்தி வளர்ந்த பாசம் தான் விழிகளில் வந்த ஈரம்.

பேருவளைப் பிராந்தியத்தில் வாசிப்பை ஊக்குவிக்கவும் எழுத்தாற்றலை வளர்க்கவும் சில நல்லுள்ளங்கள் எடுத்த முயற்சியின் விளைவு தான் பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியம். அது உருவாகி ஆறு மாதங்கள் தாண்டியிருக்காது. ஆரம்பத்திலேயே என்னையும் இணைத்துக் கொண்டார்கள். அது ஊரோடு இணைந்த அமைப்பு என்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. அப்த் அல் ஜப்பார் முஹம்மத் ஸனீர், ஹாபிஸ் இஸ்ஸதீன் போன்ற ஆளுமைகள் அதன் ஆலோசகர்களாக இருப்பது அதன் ஆரோக்கியமான பயணத்துக்கான உத்தரவாதம் எனச் சொல்லலாம்.

ஒருமுறை கவிஞர் அல் அஸூமத் அவர்களையும் அடுத்ததாக கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீன் அவர்களையும் அழைத்து எழுத்தாளர்களுக்கான வழிகாட்டல் அமர்வுகளை நடாத்தினார்கள். எவ்வளவோ முயற்சித்தும் போகக் கிடைக்கவில்லை.

ஜனவரியில் பீ.எச்.அப்துல் ஹமீத் வருகிறார் என்றதும் மனம் காற்றில் பறக்கத் தொடங்கியது. மனித வாழ்வில் குழந்தைப் பருவம் மிகவும் முக்கியமானது. பிற்காலத்தில் எவ்வளவு பெரிய மாளிகையில் வாழ்ந்தாலும், குழந்தைப் பருவத்தில் வாழ்ந்தது குடிசையாகத்தான் இருந்தாலும் மனதில் அதற்கு இருக்கும் இடம் தனியானது. மனதில் மாசில்லாத அந்தப் பருவத்தில் கிடைக்கும் நல்லாசிரியர்களுக்கான இடமும் அப்படியானது தான். மனிதன் அறிவாலும் அனுபவத்தாலும் தோற்றத்தாலும் எவ்வளவு வளர்ந்தாலும் அந்தக் குழந்தைத்தனம் மனதுக்குள் அப்படியே இருக்கும். அந்தப் பருவத்தில் உயிரோடு ஒட்டியிருந்தவற்றைக் காண நேரும் போது அந்தக் குழந்தை நிகழ்காலத்தை வென்று விடும். அப்படி நிகழ்காலத்தை வென்று வந்தது தான் அந்த ஈரம்.

பீ.எச் மேடையில் பேசிக் கொண்டிருந்தார். நீண்ட காலத்துக்குப் பிறகு தாயைக் காணும் குழந்தை போல அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வானொலியே உலகமாக, குடும்பமாக நினைத்து வாழ்ந்தவள் வேறு என்ன தான் செய்வாள்? இந்த ஏகலைவனின் துரோணர்களில் ஒருவர் அவர்.

அவரது ஒலிபரப்புத்துறை அனுபவங்கள் பற்றியும் நாம் தமிழுக்குச் செய்ய வேண்டிய தொண்டு பற்றியும் இன்னும் பயனுள்ள பல விடயங்கள் பற்றியும் பேசினார். உலகெலாம் கேட்கக் கூடிய ஊடகத்தில் பணி புரிவதை விட, குடியும் புகைப்பழக்கமும் அற்றவனாகத் தன் மகன் இருப்பதே அவரது தாய்க்குப் பெரிமையளித்திருக்கிறது. வெளிநாட்டில் பயிற்சி பெறச் சென்ற சூழலில் மது ஆறும் புகை மண்டலமும் சூழ்ந்திருக்க அவர் மனம் சலனப்பட்டிருக்கிறது. என்றாலும் தன் மகன் பற்றிய நம்பிக்கையோடு வாழ்விலிருந்து விடை பெற்ற அன்புத் தாயின் முகம் நினைவக்கு வர, இறுதி வரை தாயின் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் என நினைத்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டார் என்று சொன்னது நெகிழ்ச்சியாக இருந்தது.

பேருவளைப் பிரதேசம் பற்றி அவர் இரு விடயங்களைச் சொன்னார்.

1.காலஞ்சென்ற கவிஞர் பரீத் ஏ ஜவ்ஸகி அவர்களது கவிதைகளும் பாடல் வரிகளும் மிக அருமையானவை. கவிஞர் வைரமுத்துவுக்குச் இணையான ஆற்றல் படைத்தவர் அவர் என்றார்

2.பேருவளைப் பிரதேசத்திலுள்ள ஜாமிஆ நளீமியாவிலிருந்து வெளிவரும் பட்டதாரிகளின் தமிழறிவு சிறப்பாக இருக்கிறது. அவர்களது மார்க்க உபதேசங்கள் செவிகளைக் காயப்படுத்துவதில்லை என்றார்.

மேடை விட்டு இறங்கும் போது முதல் ஆளாக ஓடிப் போய்ப் பேசினேன். நான்கைந்து வசனங்கள் தான். மனதுக்குள் இருப்பவற்றையெல்லாம் சொல்ல எனக்கு மொழி தெரியவில்லை. அருள் மழையில் நனைந்தபடி என்ற எனது நூலொன்றையும் அவருக்கு வழங்கினேன். அவரது நூல் அறிமுக விழாவில் அவரோடு பேச நான் முயலவில்லை. அதற்கு காரணம் ஒன்றிருக்கிறது.

அன்றைக்கு அல்ஹம்றாவின் மண்டபம் ஓரளவு நிரம்பியிருந்தது. ஆனால் எமது பிராந்தியத்திலுள்ள பீ.எச் அபிமானிகளையெல்லாம் ஒன்று சேர்த்தால் அந்தப் பாடசாலையையே நிரப்பி விடலாம். பல தலைமுறைகளில் அவரது ஆதிக்கம் அந்தளவுக்கு இருந்தது.

அந்தோ பரிதாபம்! அவரது குரலிலும் மொழியிலும் மூழ்கித் திளைத்த நாங்கள் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்றைத் தவற விட்டு விட்டோமே! பேருவளைப் பிரதேச மக்கள் பேசத் தொடங்கினால் ஏனைய பிரதேசத்தவர்களுக்குச் சிரிப்புத்தான்! மொழிவழக்கு பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடுவது பிரச்சினையல்ல. ஆனால் உச்சரிப்பை நாங்கள் ஹமீத் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லையே!

ணகர னகர நகரங்களுக்கடையில் உள்ள பேதம் எங்களுக்குத் தெரியாது. லகர ளகர ழகர வித்தியாசத்தை ஒருவரும் சொல்லித் தரவேயில்லை. ரகர றகர பேதம் மட்டும் எப்படித் தெரியப் போகிறது! நாங்கள் சவை ஷ என உச்சரிக்கிறோம். நான் கற்பிக்கப் போன போது எனக்கு ஷெந்தாமரை எனப் பிள்ளைகள் பட்டப் பெயர் வைத்து விட்டார்கள். ஆகா! நான் அவ்வளவு அழகா எனப் பூரித்துப் போனேன். அவர்கள் என் உச்சரிப்பைப் பழிக்கிறார்கள் என்பது பிறகு தான் புரிந்தது.

இந்தப் பிரச்சினை என்னைப் பல வழிகளிலும் பாதிக்கிறது. நீண்ட காலமாகவே வானொலியில் பேட்டி காண அழைக்கிறார்கள். நிகழ்ச்சிகளை வழங்கும்படி சொல்கிறார்கள். நான் பின்வாங்கிக் கொண்டிருக்கிறேன். உச்சரிப்புப் பிரச்சினை தான் காரணம். கொஞ்சம் காலமாக அன்றாடப் பேச்சில் உச்சரிப்பைக் கவனமாகக் கையாளத் தொடங்கியிருக்கிறேன். ஆனாலும் பழக்கதோசம் வந்து தொலைக்கிறது.

பாடசாலைகள் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தமிழாசிரியர்களுக்கு இதில் அதிகப் பொறுப்பிருக்கிறது.

பாடசாலை மட்டத்தில் இதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். பேருவளைப் பிராந்தியத்தில் இதில் ஒரு திருப்பம் ஏற்பட வேண்டும். அதற்கான உந்துதலை அன்பு அறிவிப்பாளரின் வருகை தந்திருக்கிறது என்பதை எழுத்தாளர் ஒன்றியத்தின் வட்ஸ்அப் குழுமத்தில் என்னால் உணர முடிகிறது.

–ஷாறா–

# மாத்தளை வை.எம்.எம்.ஏ ஏற்பாட்டில் இரத்ததானம் முகாம்





மாத்தளை வை.எம்.எம்.ஏ யின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் முகாம் மாத்தளை கொங்காவல ரீடிங் ரூம் மண்டபத்தில் நடாத்தப்பட்டது இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாத்தளை மாநகரசபை ஆணையாளர் சார்பாக வைத்தியர் எம்.ரிஸ்வான் மாத்தளை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கி பொருப்பாளர் வைத்தியர் வேரகம, மற்றும் தாதியர்கள் அதிதிகளாக வைஎம்எம்ஏ யின் தேசிய தலைவர் சஹீட் எம் ரிஸ்வி, மல்டி தொழிலதிபர் சிராஜ் அஹமட் , அதன் மாத்தளை தலைவர் மேஜர் சஹீர் உட்பட அதன் முக்கிய உறுப்பினர்கள் பிரமுகர்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த வருட இறுதியில் மாத்தளை வை.எம்.எம்.ஏ யின் ஏற்பாட்டிலான இரத்ததானம் வழங்கும் முகாம் மாத்தளை பௌத்த மத்திய நிலையத்தில் நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 17

# என் மனைவிக்கு...

என் நெஞ்சுக்கு நெருக்கமானவளே.. !

நீ என்னை பார்த்த முதல் நாளும் மனைவியாகி என்னை கரம் பிடித்த நாளும் உன் வாழ்க்கையில் அழகான நாட்களாக இருக்கும். நான் உன்னுடன் கணவன் என்ற உரிமையால் உறவானவுடன் உன் நெஞ்சுக்கு நெருக்கமானவனாக நீ என்னை ஆக்கியிருப்பாய். அதை என்னால் நன்றாக புரிய முடிகிறது. உன் நேசத்தை தாராளமாக கொட்டிக் குவிக்க இப்போது உனக்கு ஒருவன் கிடைத்திருக்கிறான் என்ற இன்ப உணர்வு உனக்குள் பொங்கி எழுவதையும் உணர முடிகிறது.

உன்னைப் போலவே என்மீது நேசமும் வைத்திருப்பவர்கள் என் குடும்பத்திலும் இருக்கிறார்கள்.

நான் என் தாயின் வயிற்றில் உருவானதை அவள் அறிந்த உடனேயே, அவள் என்னை நேசிக்க ஆரம்பித்திருப்பாள். என்னை வைத்து நிறைய கனவுகள் கண்டிருப்பாள். என் தந்தை என்னை அணைத்து முத்தம் தருவதற்கு நான் உலகிற்கு வரும் வரை காத்திருந்திருப்பார். என்னை காண முன்னரே எனக்கு தந்த நேசம் அது. இந்த அனுபவம் உன் பெற்றோரிடமும் இருந்திருக்கும்.

என் தாயும் தந்தையும் என் வளர்ச்சிக்காக செய்த ஆயிரமாயிரம் அர்ப்பணங்களில் என் நினைவில் இருக்கும் ஓரிரண்டை மட்டும் உன் முன்னே மீட்டிப் பார்க்கிறேன்.

நான் குழந்தையாக இருந்தபோது அவர்கள் பேசவும் நடக்கவும் சாப்பிடவும் என பலவற்றை கற்றுக் தந்தார்கள்.

நான் முதல் வார்த்தையைப் பேச ஆரம்பித்த போதும் முதல் அடி எடுத்து வைத்த போதும் அவர்கள் கைதட்டி மகிழ்ந்தார்கள். நான் வளர்ந்து செல்லும்போது எனது முதல் அனுபவங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் நேரில் பார்த்து மகிழ்ந்தார்கள். நான் வளர வளர, அவர்கள் எனக்கு வாழ்க்கையில் பல பாடங்களை வெவ்வேறு வழிகளில் கற்பித்தார்கள்.

என்னை சுற்றி பலர் இருப்பதை காட்டித் தந்தார்கள். என் வளர்ச்சியில் அவர்கள் பங்கும் நிறையவே உண்டு என்று சொல்லித் தந்தார்கள். காலம் போகப் போக உறவினர்கள் என்ற ஒரு குடும்பம் இருக்கிறது என்று என்னால் புரிய முடிந்தது. உறவுகளுடன் கூட்டாகவும் குடும்பமாகவும் வாழ்வது அழகானது என்பதை நான் படிப்படியாக தெரிந்து கொண்டேன்.

எனது உறவுகளும் குடும்பமும் பல ஆண்டுகளாக என்னை பாதுகாப்பாக வழிநடத்தினார்கள்.

அவர்கள் எனக்கு நல்ல பல ஆலோசனைகளை தந்தார்கள். எனது ஆரம்ப காலத்திலிருந்தே, அவர்கள் எனக்கு வாழ்க்கையைப் பற்றி புரிய வைத்தார்கள். நான் நோயுற்ற பல சந்தர்ப்பங்களில் என் அருகே இருந்து ஆறுதல் தந்தார்கள். நான் சங்கடங்களை சந்தித்த போதும் குழப்பமாக இருந்தபோதும் என் பக்கத்தில் யாரும் இல்லாதிருந்த போதும் என் குடும்பம் எனக்காக இருக்கிறது என்ற உணர்வை நான் பல தடவைகள் உணர்ந்திருக்கிறேன்.

என் நண்பர்களுடன் நான் வைத்திருந்த உறவு பல சந்தர்ப்பங்களில் முடிந்து போனதுண்டு. ஆனால் என் தாயும் தந்தையும் குடும்ப உறுப்பினர்களும் என்னுடன் வைத்திருப்பது இதயத்தாலும் இரத்தத்தாலும் இணைந்த உறவு என்பதை நான் மனதார உணர்ந்து கொண்டேன். என் குடும்பம் என்னை ஒருபோதும் புறக்கணிக்காது. உன் குடும்பமும் அப்படித் தான் இருக்கும்.

நான் தோல்வியுற்ற காலத்திலும் வெற்றி பெற்ற நேரத்திலும் நான் எந்த நிலையில் இருந்தாலும், நான் இன்னும் எழுந்து நிற்க அவர்கள் எப்போதும் எனக்கு கை கொடுத்தார்கள். என் தவறுகளில் எனது ஏற்றத் தாழ்வுகளில் என் குடும்பம் எப்போதும் என்னுடன் இருந்தது.

என் வெற்றிகளின் போது என் தாய் தந்தையின் மற்றும் குடும்ப உறவுகளின் கண்களில் மகிழ்ச்சி பொங்கி வழிந்ததை நான் பார்த்து இருக்கிறேன்.

எனது பெற்றோரின் ஊக்கத்தில், செலவில், அழகான பிரார்த்தனைகளில், அயராத முயற்சிகளில் நான் பல வெற்றிகளை அடைந்துள்ளேன்.

நல்ல முறையில் உழைத்து வாழக்கூடிய ஒரு நல்ல மனிதனாக உருவாக்கி இப்போது அவர்கள் என்னை உன்னிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். உன் பெற்றோர் உன்னை என்னிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள்.

எனது குடும்பம் எனக்கு பாதுகாப்பாக இருந்து. அது என் எதிர்காலத்தை உருவாக்கிய இடமாக இருந்தது. என் வெற்றி அவர்களின் மகிழ்ச்சியாக இருந்தது. எனது சாதனை அவர்களுக்கு பெருமையாக இருந்தது.

இன்றும் என்றும் நான் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டி இருக்கிறேன்.

அன்பானவளே..

உன் வெற்றிகளுக்குப் பின்னும் உன் வளர்ச்சிக்குப் பின்னும் உன் தாய் தந்தையின் குடும்ப உறவுகளின் அர்ப்பணிப்புகள் எண்ணில் அடங்காமல் இருந்திருக்கும்.

எம்மை போன்று எமது பிள்ளைகளும் குடும்ப நந்தவனத்தில் பல திறன்களை வளர்த்து, நல்லனுபவங்கள் பல பெற்று ஒற்றுமையுடன் வாழ வழிகாட்டும் பயணத்தில் நாமும் இணைந்து கொள்ள கடமைப்பட்டுள்ளோம் என்பதை நினைவு படுத்திக் கொள்கிறேன்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# சேர் முஹம்மத் மாகான் மாகாரும் பேராதனைப் பல்கலைக்கழக பள்ளிவாசலும்

சேர் முஹம்மத் மகான் மாகார் இலங்கையின் புகழ்பெற்ற மாணிக்கக்கல் வர்த்தகர். கொழும்பு வெஸ்லி கல்லூரியில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்தார். பின்னர் குடும்ப வர்த்தகமான மாணிக்கக் கல் வர்த்தகத்தில் ஈடுபட்டார். இவரது மாணிக்கக் கல் வர்த்தகம் பிரித்தானிய அரசகுடும்பத்திலும், உஸ்மானிய கிலாபத்திலும் பிரபலம்பெற்றிருந்தது. 1909ம் ஆண்டில் பிரித்தானிய மன்னர் 7ம் எட்வர் அவர்களால் பிரித்தானியாவுக்கு வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

அவரது சேவைகளை அறிந்த உஸ்மானிய கிலாபத்தின் சுல்தான் 2ம் அப்துல் ஹமீத் அவர்கள் சேர் முஹம்மத் மாகான் மாகார் அவர்களை கொழும்பு நகரின் துருக்கிக்கான “கொன்ஸல் ஜெனரலாக“ “Consul General” நியமித்தார். கொன்ஸல் ஜெனரலாக நியமிக்கப்பட்ட போது அவருக்கு 28 வயது. இந்த பதவிக்கு கிழக்கு உலகில் இருந்து நியமிக்கப்பட்ட முதலாவது நபர் முஹம்மத் மகான் மாகார் ஆவார். 1903ம் ஆண்டு முதல் 1915ம் ஆண்டு வரை அவர் பதவி வகித்தார்.

துருக்கியையும் - மதீனா நகரையும் இணைக்கும் ஹிஜாஸ் ரெயில்வே உதையண சுயடைறயல திட்டத்திற்கு இலங்கை முஸ்லிம்கள் சார்பாக நிதி திரட்டி ஸ்தான்பூல் நகருக்கு அனுப்பிவைத்தார். 1907ம் ஆண்டில் துருக்கி வெளிவிகார அமைச்சரிடம் இந்தநிதி கையளிக்கப்பட்டது. இது தொடர்பான நிகழ்வு கொழும்பு 12 புதிய சோனகத் தெருவில் இடம்பெற்றது.

சேர் முஹம்மத் மாகான் மாகார் அவர்கள் அவரது தாயாரும் முஸ்லிம் பெண்களின் கல்வியில் அதிகம் கவனம் செலுத்தினார்கள். அவரது தாயார் ஆமீனா உம்மா மாகான் மாகான் அவர்களே காலி பஹ்ஸ துல் இப்றாஹீமிய்யா அரபுக்கல்லூரியை ஸ்தாபித்தார்கள். இலங்கை முஸ்லிம் பெண்களின் கல்வியை மேம்படுத்த நீதியரசர் அக்பர் அவர்களுடன் இணைந்து முஸ்லிம் கல்விச் சங்கத்தை ஸ்தாபித்தார். கொழும்பு 12 பாதிமா மகளிர் கல்லூரியையும் சேர் முஹம்மத் மாகான் மாகார் அவர்களின் செலவுலேயே நிர்மாணிக்கப்பட்டது. மனிங் அரசியல் திருத்தத்தின் கீழ் இலங்கை சட்டவாக்கப் பேரவைக்கு 1924ம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை முஸ்லிம்கள் தனி இனம் அல்ல என்று பிரித்தானியாவின் சுழலயட ளுழஉநைவல ழக டுழனெழஇெில் வாதாடிய ளுசை பொன்னம்பலம் ராமநாதனின் வாதங்களை முறியடிக்க சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் மூலம் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு பொன் ராமநாதனின் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை நியாயமற்றவை என்று நிறுவினார்.

போராதனை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் சேர் முஹம்மத் மாகான் மாகார் அவர்களின் சொந்தப் பணத்தில் இருந்து நிர்மாணிக்கப்பட்டதாகும். போராதனை பல்கலைக்கழகத்தில் கற்ற முஸ்லிம் பெண் மாணவியருக்கு தனது சொந்த பணத்தில் இருந்து புலமைப்பரிசில்களை வழங்கினார். முஹம்மத் மாகான் மாகார் அவர்களின் சேவையை கௌரவிக்கும் வகையில் பிரித்தானியாவின் மன்னரும் எலிசெபத் மகாராணியாரின் தந்தையுமான மன்னர் 6ம் ஜோர்ஜ் அவர்கள் ' Sir' பட்டம் மபைாவாழழன வழங்கி கௌரவித்தார் சேர் முஹம்மத் மகான் மாகார் அவர்களின் மூத்தத மகன் அஜ்வாத் மாகான் மகார் அவர்கள் இலங்கையின் முதலாவது மருத்துவத்துறை பேராசிரியர் ஆவார்.

முஹம்மத் மகான் மாகார் அவருக்கு துருக்கி அரசாங்கம் எபந்தி என்ற பட்டத்தையும் வழங்கிகௌரவித்தது. அவர் பயன்படுத்திய இராஜதந்திர உடை கொழும்பு 08 கிங்ஸி வீதியில் அமைந்துள்ள துருக்கி தூதரகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பயாஸா பாஸில்






## மருந்தாகும் Watermelon

அல்லாஹ்வின் அருட்கொடைகளில் புதுமையானதும் இனிமையானதும் தான் பழங்கள். பழங்கள் என்றாலே அனைவரும் விரும்பி உண்பர். அந்த வகையில் சிறியோர் முதல் பெரியோர் வரை விரும்பி உண்ணும் ஓர் பழம் தான் Watermelon. தாகம் தணிப்பதற்கும் , சமிபாடு மற்றும் சிறுநீரகப் பிரச்சினைகளை குணப்படுத்துவதற்கும் இப்பழம் எமக்கு உதவுகின்றது. ஆராய்ச்சியாளர்கள் கூட எமது உடம்பின் உஷ்ணத்தையும் தாகத்தையும் குறைக்கக் கூடிய பழமாக இதனைக் கூறுகின்றனர். சீரான இரத்த ஓட்டத்திற்கும் சிறு நீரகக் கல்லை கரைப்பதிலும் watermelon பெரும்பங்கு வகிக்கின்றது.

## மாங்காய் இனிப்புப் பச்சடி

**தேவையான பொருட்கள்**

பழுத்த மாங்காய் - 1
கருப்பட்டி - 2

தாளிக்க :
எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்
கடுகு - சிறிது
உளுந்து - சிறிது
வரமிளகாய் - 2
கறிவேப்பிலை - சிறிது

**செய்முறை**

மாங்காயை தோல் நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். முதலில் வானொலியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு , உளுந்து, வரமிளகாய் , கறிவேப்பிலை ஆகியவற்றை தாளித்து பின் நறுக்கிய மாங்காய் துண்டுகளைப் போட்டு நன்றாக வதக்கவும். மாங்காய் முக்கால் பாகம் வெந்தவுடன் பொடித்த கருப்பட்டியை சேர்க்கவும்.

கருப்பட்டி கரைந்தவுடன் அடுப்பில் இருந்து இறக்கி விடவும். மாங்காய் அரைப்பழமாக இருந்தாலே போதுமானது.

கருப்பட்டியை மாங்காயின் இனிப்பிற்கேற்ப கூடுதலாகவே குறைவாகவா சேர்த்துக் கொள்ளவும். இந்த பச்சடி தயிர் சாதத்துடன் சாப்பிட நன்றாக இருக்கும்.

## யடிஹேன அல்முஸ்தபாவில் செயலமர்வு

பஹன மீடியா நிறுவனத்தின் துணை நிறுவனமான பஹன அகடமி ஏற்பாடு செய்துள்ள ”தொடர்பாடல் நுட்பங்களூல் செயற்கை நுண்ணறிவின் முக்கியத்துவம்” தொடர்பான ஒரு நாள் செயலமர்வு எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, மள்வான யடிஹேன அல்முஸ்தபா மஹா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது,

வித்தியாலயத்தின் அதிபர் எம்.எஸ்.எம். முஹம்மத் சம்ரிஹான் (நளீமி) தலைமையில் நடைபெறும். இச்செயலமர்வில் முன்னாள் ஊடகத்துறைப் பணிப்பாளர் மாத்தியக்கீர்த்தி ஹில்மி முஹம்மத் (எஸ்.எல்.ஏ.எஸ்) ஊடகத்துறை முதுமாணிப் பட்டதாரி பவாஸ் அன்பியா,நெறளமெற பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்,

கருத்தரங்கின் இறுதியில் நடைபெறும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பஹனமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முஜிப் ஸாலிஹ் மற்றும் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



அரபாத் பஹுர்தீன்

# இளையோர் உலகக்கிண்ண இலங்கையின் கனவு கலைந்தது

இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் சுப்பர் சிக்ஸ் சுன்றில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் 119 ஓட்டங்களால் படுதோல்வியடைந்த இலங்கை இளையோர் அணி உலகக்கிண்ணத் தொடரிலிருந்து ஏமாற்றத்துடன் வெளியேறியது.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்றுவரும் இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் முதல் சுற்று முடிவில் குழுநிலையில் இரண்டாம் இடம்பெற்ற இலங்கை இளையோர் அணி சுப்பர் சிக்ஸ் சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்தது. இந்நிலையில் சுப்பர் சிக்ஸ் சுற்றின் முதல் போட்டியில் இலங்கை இளையோர் அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் தோல்வியடைந்திருந்தது. இதனால் இத் தொடரின் அரையிறுதிக்குத் தகுதி பெற தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் வென்றாக வேண்டிய நிர்பந்தத்துடன் களம் கண்டது இலங்கை இளையோர் அணி.

இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை இளையோர் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க இணையோர் அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் /ஹவான் டி ப்ரெய்டொரியஸ் 71 ஓட்டங்களையும்இ ரைலி நோர்டன் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் இலங்கை அணிக்காக தொடர்ந்தும் சிறப்பாகப் பந்துவீசி வரும் விஸ்வ லஹிரு மற்றும் மல்ஸ தருபதி மற்றும் சுபுன் வடுகே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின்னர் 233 என்ற சவால்மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை இளையோர் அணியின் சார்பில் முன்னிலைத் துடுப்பாட்ட வீரர்கள் யாருமே நிலைத்திருந்து ஓட்டங்கள் குவிக்கத் தவற சாருஜன் சணடமுகநாதன் மாத்திரம் 29 ஓட்டங்களை பெற்றுக் கொள்ள இலங்கை அணியால் 23.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. பந்துவீச்சில் மாபாக்கா 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதனால் 119 ஓட்டங்களால் படுதோல்வியடைந்த இலங்கை இளையோர் அணி அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்து தொடரிலிருந்து ஏமாற்றத்துடன் வெளியேறியது.

# கண்காட்சி உதைப்பந்தாட்ட போட்டி
## கடற்படையை வீழ்த்தியது ஏறாவூர் இளந்தாரகை






புத்தளம் லெஜன்ஸ் உதைப்பந்தாட்ட கழகம் ஏற்பாடு செய்திருந்த சினேகபூர்வ கண்காட்சி உதைபந்தாட்ட போட்டியில் இலங்கையின் முதல்தர தொடர்களில் பங்கேற்கும் கழகமாக இலங்கை கடற்படையின் சீ ஹவுக்ஸ் அணியை 2:1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்திய ஏறாவூர் இளந்தாரகை (YSSC) உதைபந்தாட்ட கழகம் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றுக்கொண்டது.

புத்தளம் நகரசபை மைதானத்தில் (2) பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான போட்டியில் இரு கழக வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருப்பினும் அனுபவமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை கடற்படை கழகம் முதல் கோலை உட்செலுத்தி தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியது. இருப்பினும் பதில் கோல் அடிக்கும் இளந்தாரகை (YSSC) வீரர்களின் முயற்சி பலனில்லாமல் போக முதல் பாதி 1:0 என இலங்கை கடற்படை வசமானது.


பின்னர் ஆரம்பித்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் புது உத்வேகத்துடனும் வியூகத்துடனும் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் களம் கண்டது இளந்தாரகை (YSSC) கழகம். இருப்பினும் தமது முன்னிலையை தக்கவைத்துக் கொள்ள தடுப்பு ஆட்டத்தை மேற்கொண்ட இலங்கை கடற்படை கழகத்தின் வியூகங்களை முறியடித்து சிறப்பான பந்து பரிமாற்றம் மூலம் இளந்தாரகை ( YSSC) கழகத்தின் முன்கள வீரரான முஸ்தாக் முதல் கோலை உட்செலுத்த மைதானம் கரகோசத்தால் அதிர்ந்ததுடன் போட்டி 1:1 என சமநிலை பெற்றது.

பின்னர் தொடர்ந்த போட்டியில் மிகச் சிறந்த பந்துப் பரிமாற்றத்தை பெற்ற முஸ்தாக் தன் பங்கிற்கு 2ஆவது கோலையும் உட்செலுத்த 2:1 என முன்னிலை பெற்றது இளந்தாரகை (லுளுளுஊ) கழகம். மேலதிக நேரத்தில் இலங்கை கடற்படை கழகத்தின் கோல் முயற்சிகள் கைகொடுக்காமல் போக போட்டி முடிவில் 2:1 என பலமிக்க இலங்கை கடற்படை கழகத்தை இளம் வீரர்களைக் கொண்ட இளந்தாரகை (YSSC) கழகம் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.









# இங்கிலாந்துக்கு எதிராக இரட்டைச் சதம் விளாசினார் ஜாய்ஸ்வால்

சுற்றுலா இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இளம் வீரரான யசஸ்வி ஜாய்ஸ்வால் அசத்தலான இரட்டைச் சதம் விளாச இந்திய அணியின் ஆதிக்கம் அதிக மாகியது.

இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதன் முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 28 ஓட்டங்களால் அசத்தல் வெற்றியை பதிவு செய்து தொடரில் 1:0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இரு அணிகளும் இடையிலான 2ஆவது போட்டி விசாக்காபட்டினத்தில் 2ஆம் திகதி ஆரம்பித்தது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடிய இந்திய அணி அனுபவமிக்க வீரர்களை விரைவாக இழந்தது. இருப்பினும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகப்படுத்திய இளம் வீரரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரருமான ஜாய்ஸ்வால் ஒரு புறம் சதம் விளாசி நிலைத்திருந்தார். மற்றைய வீரர்களில் ஒருவர் கூட அரைச்சதம் பெற்றிருக்கவில்லை. இதனால் முதலாம் நாள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 336 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஜாய்ஸ்வால் 179 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பின்னர் நேற்று ஆரம்பித்த போட்டியின் 2ஆம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஜாய்ஸ்வால் தனது முதல் இரட்டை சதத்தை விளாசி அசத்தியதுடன் 209 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இதனால் இந்திய அணி 396 ஓட்டங்களுடன் முதல் இன்னிங்ஸை முடித்துக் கொண்டது.

பந்துவீச்சில் அண்டெர்சன், சொஹைப் பஷீர் மற்றும் ரெஹான் அஹமட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி 2ஆம் நாளின் தேனீர் இடைவேளை வரை 3 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் க்ரவ்லி 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருக்க கடந்த போட்டியில் இரட்டை சதம் அடித்த ஒல்லி பொப் 21 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.